நாவாந்துறைப் படிப்பகம்


# Saturday மெயில்

01 - 04

24-10-2009
பக்கங்கள்: 24
விலை: 15/=

සැටඩේ මේල්

*A Fascinating Weekly Bulletin*




# சிறைக் கம்பிகளுக்கு பின்னால் ஒரு கோடி பேர்

உலகில் சிறையில் அடைக்கப்பட்டிருப்போரில் தற்போதைய எண்ணிக்கை சுமார் ஒரு கோடியாகும். அதில் சிறுவர்களின் எண்ணிக்கை சுமார் 10 இலட்சமாகும். 9 அல்லது 10 வயதுச் சிறுவர்களும் கணிசமான எண்ணிக்கையில் இவர்களில் அடங்குகிறார்கள்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக்கு இவ்வாரம் கையளிக்கப்பட்ட அறிக்கையொன்றில் இந்த விபரம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆஸ்திரிய நாட்டைச் சேர்ந்த மனித உரிமைகள் வழக்கறிஞரும் சித்திரவதை, ஏனைய கொடூரச் செயல்கள் மற்றும் மனிதாபிமானமற்ற நடத்தைகள் தொடர்பான ஐ.நா.விசேட அறிக்கையாளருமான மான்பிரெட் நோவாக் கே இந்த அறிக்கையை கையளித்திருக்கிறார்.

அறிக்கையை கையளித்த பின்னர் நியூயோர்க்கில் கடந்த செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களுடன் பேசிய நோவாக் ‘மறக்கப்பட்டவையாக இருக்கும் சிறைகள்’ மற்றும் சிறுவர்கள் கொடுமைப்படுத்தப்படும் தடுப்புக் காவல் நிலையங்கள் மீதே கூடுதலான கவனத்தைச் செலுத்தி அறிக்கையை தயாரித்ததாகக் கூறினார்.

உலகில் சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் சுமார் ஒருகோடி பேர் இருக்கிறார்கள். இவர்களில் அதிகப் பெரும்பான்மையானவர்கள் ஏற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலைகளின் கீழேயே சிறைவைக்கப்படுகிறார்கள்.

உருகுவே நாட்டின் சில சிறைகளில் சிறிய தகர அறைகளிலேயே கைதிகள் பல வருடங்களாக அடைத்து வைக்கப்படுகிறார்கள். இந்த தகர அறைகளுக்குள் வெப்பநிலை 140 பாகை பரனைட் வரை (60 சதம பாகை) அதிகரிக்கும் என்றும் அறியக்கூடியதாக இருக்கிறது. நைஜீரியச் சிறைகளில் பெண்களும் சிறுவர்களும் ‘சித்திரவதைக் கூடங்களுக்குள்’ அடைக்கப்பட்டிருக்கிறார்கள். நைஜீரியாவைப் போன்றே இன்னொரு ஆபிரிக்க நாடான லாகோஸிலும் பெண்களும் சிறுவர்களும் குற்றவியல் விசாரணைத் திணைக்கள அதிகாரிகளினால் சித்திரவதைக் கூடங்களுக்குள் வைக்கப்பட்டிருக்கிறார்கள். கால்களுக்கிடையில் துப்பாக்கியால் சுடுவது, கடுமையாகக் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை எதுவும் அளிக்காமல் வேதனைப்பட வைப்பது போன்ற சித்திரவதைகள் இந்த கூடங்களில் சர்வசாதாரணமாக இடம்பெறுகின்றன.


உலகின் சிறைக் கைதிகளிலே பெரும்பான்மையானவர்கள் மனித கௌரவத்தைச் சிதைக்கும் வகையிலான நிலைமைகளின் கீழேயே இருக்கிறார்கள். சிறைச்சாலைகளைப் பொறுத்தவரை பொதுவாகப் பிரச்சினையாக இருப்பது நெரிசலாகும். ஜோர்ஜியா, நேபாளம், இலங்கை மற்றும் ரோகோ ஆகிய நாடுகளின் சிறைச்சாலைகளுக்கு சென்று பார்வையிட்டபோது கைதிகள் மிகுந்த நெரிசலாக அடைத்து வைக்கப்பட்டிருப்பதைக் காண முடிந்ததாக நோவாக் கூறியிருக்கிறார்.

(2ஆம் பக்கம் பார்க்க)

Registered as a Newspaper at G.P.O.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிகளின் மரணம்?



ஆங்கிலத்தைப் படிக்குமாறு எல்லோருமே உங்கள் பிள்ளைகளை வற்புறுத்துகிறீர்கள். ஆங்கிலத்தைப் படிக்காவிட்டால் கல்வியில் முன்னேறமுடியாது என்றும் நல்ல தரமான தொழில் வாய்ப்புகளைப் பெறுவது கஷ்டமாக இருக்கும் என்றும் ஆலோசனைகளும் கூறுகிறீர்கள்.

ஆனால், ஆங்கிலம் உலகில் ஏற்படுத்திவருகின்ற ஆபத்துக் குறித்து எவருமே சிந்திக்கிறார்கள் இல்லை என்று பிரான்ஸ் நாட்டின் முன்னணி மொழியியல் நிபுணரான குளோடி ஹேஜ்கே கவலை வெளியிட்டிருக்கிறார்.

மொழிகள் அழிந்து போவதைப் பற்றி பெரும்பாலானவர்கள் கவலைப்படுகிறார்கள் இல்லை. ஆங்கிலம் ஆக்கிரமிப்பை மேற்கொண்டு வருகின்ற தன்மையைப்பற்றி ஜாக்கிரதை கொள்ளாவிட்டால் இறுதியில் பல மொழிகள் இல்லாமல் போய்விடும் என்று அவர் எச்சரிக்கை செய்திருக்கிறார்.

உலகில் இன்று சுமார் 7,000 மொழிகள் பேசப்படுவதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த எண்ணிக்கை அடுத்த சில தசாப்தங்களில் சுருங்கிப் போய்விடக்கூடிய ஆபத்து இருக்கிறது. உலக மொழிகளில் 90 சதவீதமானவை 2100 ஆம் ஆண்டளவில் வழக்கில் இல்லாமல் போய்விடும் என்று 1992 ஆம் ஆண்டு அமெரிக்காவின் பிரபல மொழியியல் நிபுணர் ஒருவர் எதிர்வு கூறியிருந்தார்.

அமெரிக்காவில் எஸ்.ஐ.எல். இன்டர்நாஷனல் என்ற கிறிஸ்தவ குழுவொன்றுக்குச் சொந்தமான *'Ethnologue'* என்ற அமைப்பினால் திரட்டப்பட்ட உலகமொழிகள் பற்றிய புள்ளிவிபரங்களின்படி, இன்று உலகில் 473 மொழிகள் ஆபத்துக்குள்ளாகியிருப்பவை என்று வகைப்படுத்தப்பட்டிருக்கின்றன.

உலகமயமாக்கலின் விளைவாக பல சிறிய சமூகங்கள் தங்களது ஒதுக்கமான வாழ்வில் இருந்து வெளியே வந்து பரந்த உலகத்துடன் ஊடாட்டங்களைச் செய்ய ஆரம்பித்துள்ளன. இதனால் அவற்றின் மொழிகள் அழிந்து போகும் ஆபத்தை எதிர்நோக்குகின்றன. அமெரிக்காவில் ஒரு சமூகத்தினால் பேசப்பட்ட லிபான் அபாச்சே என்ற மொழியைப் பேசுபவர்களில் தற்போது இருவரே உயிருடன் இருப்பதாகவும் கொலம்பியாவில் ரோரோரோ என்ற மொழியைப் பேசியவர்களில் நான்கு பேரை மாத்திரமே தற்போது காணக்கூடியதாக இருப்பதாகவும் கெமரூன் நாட்டில் பிக்கியா மொழியைப் பேசியவர்களில் தனியொருவர் மாத்திரமே தற்போது இருப்பதாகவும் மேற்கூறப்பட்ட பிரெஞ்சு மொழியியல் நிபுணர் பி.பி.சி.க்கு தெரிவித்திருக்கிறார்.

உலக மொழிகளில் 6 சதவீதமானவை உலக சனத்தொகையின் 94 சதவீதமானவர்களினால் பேசப்படுகின்றன. எஞ்சிய 94 சதவீதமான மொழிகளை உலக சனத்தொகையின் 6 சதவீதத்தினர் மாத்திரமே பேசுகிறார்கள். அதிகப் பெரும்பான்மையானவர்களினால் பேசப்படுகின்ற தனியொரு மொழியாக மண்டாரின் (சீனமொழி) விளங்குகிறது. இதை 84 கோடி 50 இலட்சம் பேர் பேசுகிறார்கள். அடுத்ததாக ஸ்பானிய மொழியை 32 கோடி 90 இலட்சம் பேரும் ஆங்கிலத்தை 32 கோடி 80 இலட்சம் பேரும் பேசுகிறார்கள். 133 மொழிகள் பத்துக்கும் குறைவான எண்ணிக்கையானவர்களினால் பேசப்படுகின்றன என்று **Ethnologue** அமைப்பின் தகவல்கள் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது.

பல மொழிகள் வழக்கில் இல்லாமல் போவதன் விளைவாக வளம் மிக்க பல கலாசார பாரம்பரியங்களை, இயற்கையுடனான உறவுமுறைகளை மக்கள் வெளிப்படுத்திய தன்மைகளை நாம் இழந்துவிடுகிறோம் என்று பிரெஞ்சு மொழியியல் நிபுணர் கூறியிருக்கிறார்.

---

**சிறைக்...**

**(முன்பக்கத் தொடர்ச்சி)**

இந்தோனேசியாவிலும் பாகுவேயிலும் கைதிகளுக்கு உணவு மற்றும் மருந்து வகைகளைக் கொடுக்காமல் சிறை அதிகாரிகள் கொடுமை செய்கிறார்கள். சில சந்தர்ப்பங்களில் இந்த கைதிகள் சிறைக் கூடங்களுக்குள் படுப்பதற்குத் தங்களது அன்றாட சம்பளத்தைக்கூட கொடுக்க நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

முன்னாள் சோவியத் குடியரசான ஜோர்ஜியாவில் சிறைச்சாலையொன்றில் மரண தண்டனை விதிக்கப்பட்ட பெண் கைதியொருவர் பாரிசவாத நோயால் பாதிக்கப்பட்ட நிலையில் பலவருடங்களாக ஒரே கட்டிலில் படுக்கவைக்கப்பட்டிருக்கிறார்.

அரபுலகச் சிறைச்சாலைகளில் சித்திரவதை பரவலானதாக இருக்கிறது. பெரும்பாலான அரபு நாடுகள் அவற்றின் சிறைச்சாலைகளுக்கும் தடுப்புக் காவல் நிலையங்களுக்கும் நோவாக் விஜயம் செய்வதற்கு அனுமதிக்கவில்லை.ஜோர்தான் சிறைகளுக்குச் சென்று நிலைவரங்களைப் பார்வையிடக்கூடியதாக இருந்ததாக நோவாக் கூறியிருக்கிறார்.

உருகுவேயில் சிறைகளில் சிறுவர்கள் இயற்கைக் கடன்களைக் கழிப்பதற்குக்கூட அனுமதிக்கப்படாமல் தினமும் 22 மணித்தியாலங்களுக்கு மேல் அடைத்துவைக்கப்பட்டிருக்கிறார்கள். பல நாடுகளின் சிறைகளிலும் தடுப்புக் காவல் நிலையங்களிலும் சிறுவர்களும் வயது வந்தவர்களும் பிரித்துவைக்கப்படாமல் ஒன்றாக அடைத்து வைக்கப்பட்டிருப்பதால் துஷ்பிரயோகங்கள் பரவலாக இடம்பெறுகின்றன என்று நோவாக் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாக ராய்ட்டர் செய்திச் சேவை அறிவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியேற்றத்துக்குப் பின்னரே கொழும்பு–யாழ். தனியார் பஸ் சேவை

**இலங்கை தனியார் பஸ் சேவை உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜயரட்ன கூறுகிறார்**

ஏ-9 வீதியூடாக தனியார் பஸ் சேவையை ஆரம்பிக்க வேண்டுமானால், மக்கள் மீள்குடியேற்றப்படுவது அவசியமெனத் தெரிவித்துள்ள இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜயரட்ன, கொழும்பு - யாழ். போக்குவரத்தில் ஈடுபடும் சட்டத்துக்குப் புறம்பான பஸ் தொடர்பிலும் அதில் அறவிடப்படும் அநீதியான கட்டணம் தொடர்பிலும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடம் முறையிடப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

Saturday மெயிலுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவரின் பேட்டி விபரம் வருமாறு;



**கேள்வி: 'ஏ-9' வீதியூடான தனியார் பஸ் போக்குவரத்துகள் குறித்து தற்போதைய நிலைமைகள் என்ன?**

**பதில்:** இந்தியாவிடமிருந்து சலுகை விலை அடிப்படையில் பஸ்களைத் தருவிக்க நாம் அரசுக்கு யோசனையொன்றை முன்வைத்துள்ளோம். யாழ்ப்பாணத்திற்கும், கிழக்கிற்குமே இவற்றை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 30 ஆசனங்களைக் கொண்ட 750 மினி பஸ்களும் அதேபோல், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு, பதுளை போன்ற வெளி மாவட்ட போக்குவரத்துகளுக்காக 75-80 பெரிய பஸ்களையும் தருவிக்கவே யோசனை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களுக்கு தனியார் பஸ் சேவையில் முன்னுரிமை வழங்கும் முகமாகவே இந்த யோசனை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நாம் இந்த யோசனையை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்தவுடன், அது அங்கிருந்து நிதி அமைச்சுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இதற்குப் பின்னர் என்ன நடந்ததென்று எமக்குத் தெரியாது. எனினும், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழேயே இந்த வேலைத் திட்டமும் முன்னெடுக்கப்படுகிறது. அரசாங்கத்தினூடாக கோரிக்கையை முன்வைத்தால் அதைப் பரிசீலிக்க முடியுமென இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயமும் எமக்கு வலியுறுத்தியிருக்கிறது.

**கேள்வி:'ஏ-9' வீதியூடாக யாழ்ப்பாணத்துக்கான தற்போதைய பொதுப் போக்குவரத்து நடவடிக்கைகள் பற்றி?**

**பதில்:** இதில் பிரச்சினை இருப்பதாகவே நாம் கருதுகிறோம். அதாவது, யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கான போக்குவரத்தில் ஈடுபடும் சட்டத்துக்குப் புறம்பான பஸ்ஸொன்று குறித்து எமக்குப் பிரச்சினை இருக்கிறது. ஏனெனில், இதில் ஒரு வழிப் பயணத்திற்கு 2,800 ரூபா கட்டணமாக அறவிடப்படுகிறது. எனினும், முன்னர் போர் நிறுத்த உடன்படிக்கை காலத்தில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு நேரடியாக சென்ற பஸ்களில் விடுதலைப் புலிகளுக்கு 350 ரூபா கப்பம் வழங்கியும் ஒருவருக்கு ஆயிரம் ரூபாவே கட்டணமாக அறவிடப்பட்டது. எனவே, இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களே அங்கு சேவையில் ஈடுபட்டு வரும் நிலையில் தனியார் பஸ் சேவையில் யாழ்ப்பாண மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதே எமது நோக்கம்.

**கேள்வி: இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகார தரப்பினரின் கவனத்துக்கு ஏதும் கொண்டு வரப்பட்டிருக்கிறதா?**

**பதில்:** தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடம் நாம் இது பற்றி எடுத்துரைத்திருக்கிறோம். ஆணைக்குழு இவ்விடயத்தில் தலையீடு செய்துள்ளமையால் இதில் ஏதாவது நடக்கும். இல்லாவிட்டால், இது தவறான முன்மாதிரியாக போய்விடும். இதற்கு அனுமதியளித்தால் இங்குள்ள எம்மவர்களும் கட்டணங்களை அதிகரித்து விடுவர். பின்னர் இது தொடர்பாக அவர்களை நீதிமன்றம் கொண்டு சென்றாலும் இதை ஏன் மேற்குறித்த சட்டத்துக்குப் புறம்பான சேவையில் ஈடுபடும் பஸ்ஸிற்கு செய்யவில்லையென கேள்வி எழுப்பினால் அது பெரும் சிக்கலாகி விடும். எனவே, இது ஆரோக்கியமானதாக இருக்கிறது. பொதுவாக யாழ்ப்பாணத்துக்கான குளிரூட்டப்பட்ட பஸ் சேவைக்கு ஒரு வழி பயணக் கட்டணமாக 900 ரூபா தொடக்கம் 1000 ரூபா வரையான தொகையை அறவிடுவது நியாயமானது. எனினும், இங்கு 3 மடங்கு அதிகமாக அறவிடப்படுகிறது. எனவேதான் இது குறித்து நாம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் போக்குவரத்து அமைச்சர் ஆகியோரது கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளோம்.

**கேள்வி: தனியார் பஸ் சேவைக்கு 'ஏ-9' பாதையூடான போக்குவரத்தில் தற்போது இருப்பதாக கூறப்படும் சிக்கல்கள் என்னென்ன?**

**பதில்:** பாதுகாப்பு தான் பிரச்சினையாக இருக்கிறது. அரச போக்குவரத்துச் சேவை மட்டுமே அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனினும், எந்தத் தருணத்திலும் எம்மால் முடியும். அதற்கு நாம் தயாராகவே இருக்கிறோம். எவ்வாறிருப்பினும் யாழ்ப்பாணத்துக்கான தனியார் பஸ் போக்குவரத்தில் யாழ்.மக்களுக்கு முன்னுரிமையாக 75 சதவீதமும் கொழும்பைச் சேர்ந்தவர்களுக்கு 25 சதவீதமும் வழங்கப்பட வேண்டுமென்பதே எமது நோக்கம்.

**கேள்வி: 'ஏ-9' பாதையூடான போக்குவரத்து அனுமதி தனியார் பஸ் துறையினருக்கு எப்போது கிடைக்குமென நினைக்கிறீர்கள்?**

**பதில்:** இது குறித்து நாம் யோசிக்க வேண்டும். ஏனெனில், யாழ்ப்பாணம், கொழும்பு நேரடி பஸ் சேவையில் பெரிய விடயமொன்று இல்லை. ஏனெனில், யாழ்ப்பாணம் - கொழும்பு நேரடி பஸ் சேவைக்கு அதிக பட்சம் 2 பஸ்களே தேவைப்படும். அதை விடுத்து ஏ-9 வீதியூடான போக்குவரத்தானது மீள்குடியேற்றங்களின் பின்னரே பயனுடையதாக அமையும். ஏ-9 வீதியை அண்டிய பிரதேசங்களில் மீள்குடியேற்றம் செய்து மக்கள் நடமாட்டம் ஏற்பட்டால் மாத்திரமே அதனூடான போக்குவரத்துகள் எமக்குப் பயன்மிக்கதாக இருக்கும். அதை விடுத்து மக்கள் நடமாட்டம் இல்லாத வெறும் பிரதேசங்களூடாக பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவது அர்த்தமற்ற விடயமே.

**கேள்வி: யாழ்.குடாநாட்டில் நடைமுறையிலுள்ள பஸ் கட்டணங்கள் மற்றும் தனியார் பஸ் துறையினருக்கான வசதிகள் பற்றி?**

**பதில்:** கட்டணங்கள் நியாயமானவையாகவே இருக்கின்றன. யாழ். குடாநாட்டைப் பொறுத்த வரையில் அங்கு உள்ளூர் பஸ் சேவைகளில் பெரும்பாலும் சிறிய பஸ்களே ஈடுபடுகின்றன. அங்குள்ள தனியார் பஸ் உரிமையாளர்கள் அனைவரும் எனது சங்கத்தைச் சேர்ந்தவர்களாவே இருக்கின்றனர். எனவே, அவர்களது நலன் பற்றி செயற்படுவது எனது கடமை. எனவேதான் இந்திய அரசினூடாக மேற்குறித்த வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். எனினும், யாழ்.குடாநாட்டில் சகல பிரதேசங்களிலும் நேர்த்தியான வீதிகள் இல்லையென்பதால் பெரிய பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவது சாத்தியமில்லை. இதேநேரம், யாழ்ப்பாணம்-வவுனியா இடையே இ.போ.ச. பஸ்கள் சேவையில் ஈடுபடுவதில் சாதகமான விடயங்களும் இருக்கின்றன. அடுத்தது என்னவென்பதை மக்கள் தான் தெரிவு செய்ய வேண்டும். எனினும், அதிக கட்டணங்களைச் செலுத்தி சிரமப்படாமல் இ.போ.ச. பஸ்களில் பயணிக்குமாறு மக்களை கேட்டுக் கொள்கின்றேன். எதிர்வரும் நாட்களில் என்ன செய்ய முடியுமென்பது குறித்துப் பார்ப்போம்.

**டிட்டோ குகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒவ்வொரு நாட்டினது வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலும் இளைஞர், யுவதிகளின் பங்களிப்பு முக்கியமானது. சிறந்த திட்டமிடல்களையும் அதற்கேற்ப செயற்பாடுகளையும் மேற்கொள்ளக் கூடிய திறமை இவர்களிடமே அதிகமாக இருக்கிறதென்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனால், யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பொறுத்தவரை தற்போது இந்தக் கருப்பொருளில் பாரிய வீழ்ச்சி நிலை ஏற்பட்டுள்ளது.

யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து தற்போது யாழ்ப்பாணக் குடாநாடு புதியதொரு சூழ்நிலைக்குள் பிரவேசித்துக் கொண்டிருக்கின்ற நிலையில் இளைஞர்,யுவதிகளோ தங்களுக்குரிய வழி என்ன என்பதைத் தெரியாத நிலையில் தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள். குடாநாட்டின் நகர்ப்புறங்களை விட கிராமப்புறங்களிலேயே அதிகளவு இளைஞர்,யுவதிகளே அதிகமாக இந்த நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள். க.பொ.த.சாதாரண தரம் மற்றும் உயர்தரம் போன்றவற்றுக்குத் தோற்றி மேற்படிப்பைத் தொடர முடியாத ஆயிரக்கணக்கான இளைஞர்,யுவதிகள் தங்கள் எதிர்காலம் தொடர்பாகச் சிந்தித்து முடிவெடுக்க முடியாதவர்களாக இருக்கின்றனர். இவர்களின் இந்த இருப்பானது சமூக ரீதியாகப் பல்வேறு முரண்பாடுகளைத் தோற்றுவித்துள்ளது.

குறிப்பாகத் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் ஒவ்வொரு தனி நபரையும் பாதித்துக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் இந்த இளைஞர்,யுவதிகள் எதுவித முன்னேற்றமும் இன்றி 'வெட்டியாகப்' பொழுதைப் போக்குவதென்பது அவர்களை உள்ள

தாக்கிய சம்பவங்களும் இடம்பெற்றிருக்கின்றன.

இவ்வாறான 'கட்டுப்பாடற்ற' இளைஞர்கள் சில இடங்களில், சில சந்தர்ப்பங்களில் பெற்றோர்களையே மதிக்காதவர்களாகச் செயற்படுகின்றனர். மிகச் சிறிய வயதிலேயே புகைத்தலுக்கும், மதுவுக்கும் அடிமையாகிறார்கள். 'றூம்களில்' பார்ட்டி வைப்பது 'பீச்' களில் நீச்சலடிப்பதுமாக இவர்களின் வாழ்வு கழிகிறது. இந்த நிலையில், இவர்கள் சமூக விரோதச் செயற்பாடுகளை நோக்கித் தள்ளப்படுகின்றார்கள். குறிப்பாகத் தமது நண்பர்களுடன் சேர்ந்து குடித்துக் கும்மாளமடிப்பதற்குரிய பணத்தைப் பெறுவதற்காகத் திருட்டுச் சம்பவங்களிலும் ஈடுபடுகின்றார்கள்.

'இளைஞர்கள் தொழில் வாய்ப்புகள் அல்லது ஒழுங்கான வழிப்படுத்தல்கள் இன்றி இருக்கின்ற ஒரு நாட்டில் அல்லது சமூகத்தில் குற்றச் செயல்கள் அதிகமாக இடம்பெறுவதற்கு வாய்ப்புள்ளது' என்ற கருத்தியல் குடாநாட்டில் இன்று செயல் வடிவம் பெற்றிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

கடந்த 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருநெல்வேலிப் பகுதியில் வீதியால் சென்று கொண்டிருந்த பெண்ணொருவரின் தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடிய 22 வயதுடைய இளைஞர் ஒருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டுத் தாக்கப்பட்டிருக்கின்றார். இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ச்சியாகவே குடாநாட்டில் இடம்பெற்று வருகின்றன.

போதிய பொருளாதார வசதிகளோ இல்லாமையால் இளவயதுக் கணவன்-மனைவிக்கிடையே பல்வேறு முரண்பாடுகளும் அடிபிடி சண்டைகளும் ஏற்படுகின்றன. இவற்றைத் தொடர்ந்து இவர்களில் சிலரின் வாழ்க்கை சூனியமாகி சில வருடங்களிலேயே மண முறிவுகளும் விவாகரத்துகளும் ஏற்படுகின்றன. இவ்வாறான சில வேளைகளில் இவர்கள் நீதிமன்றங்களை நாடுகின்ற சந்தர்ப்பங்களையும் அவதானிக்க முடிகின்றது.

விஞ்ஞானம் மிக வேகமாக வளர்ந்துவிட்ட இந்த வேளையிலும் உலகின் நடப்பு விடயங்களை அறிந்து கொள்வதில் இவர்கள் ஆர்வம் காட்டாதவர்களாக இருக்கிறார்கள்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்கள் சமூக அபிவிருத்தி என்ற பெயரில் பல வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்ற போதிலும் கிராமப் புறங்களிலுள்ள இளைஞர், யுவதிகளின் வாழ்க்கைத்தரம் மற்றும் அறிவியல் ரீதியான மேம்பாடுகளில் பெரிதாக எதையுமே அவர்களால் சாதிக்க முடியவில்லை. குடாநாட்டிலுள்ள கிராமப் புறங்களைத் தரிசிப்பதன் மூலம் இந்த உண்மையை உணர்ந்துகொள்ள முடியும்.

இளைஞர்,யுவதிகளுக்கான வாழ்க்கைத்தர மேம்

# குடாநாட்டில் அதிகரிக்கும் குற்றச்செயல்கள்

டக்கிய குடும்பங்களைப் பெரியளவில் பாதித்துள்ளது.

கிராமப் புறங்களில் இவ்வாறு எதுவித தொழில் முயற்சிகளும் இன்றி இருக்கின்ற இளைஞர்கள் பொழுது போக்குவதற்காக நாள் முழுவதும் வீதிகளிலும் பொது இடங்களிலும் நிற்பதைக் காணமுடிகின்றது. ஊர்க் கோயில்களில் திருவிழாக்கள், பொது இடங்களில் நிகழ்வுகள் என்றவுடன் 'ஹீரோக்களாக' மாறி வலம் வருவதானது அவர்களுக்கு அதீத மகிழ்வைக் கொடுக்கிறது. குறிப்பாகத் தென்னிந்தியத் திரைப்படங்களில் வருகின்ற ஹீரோயிசம் இவர்களையும் ஆக்கிரமித்திருக்கின்றது.

இரவும்,பகலும் ஒன்று சேர்ந்து சுற்றுகின்ற இந்த இளைஞர்கள் சமூகத்திலுள்ள பெரியோர்களுக்கு மதிப்பு வழங்குவதில் பூஜ்ஜியமாகவே இருக்கின்றனர். தாங்கள் விடுகின்ற தவறுகளைச் சுட்டிக்காட்டித் திருத்த முற்படுகின்ற போது அவற்றை உதாசீனம் செய்வதோடு, பெரியவர்களுடன் முரண்படுவதையும் அவதானிக்க முடிகிறது.காலை வேளைகளில் ஒன்று கூடுகின்ற இவர்கள் பாடசாலைகளுக்குச் செல்கின்ற மாணவிகளைப் பின்தொடர்ந்து செல்கின்றனர். பாடசாலை முடிவடைகின்றபோது பாடசாலைகளுக்கு முன்னால் ஒன்று கூடி மாணவிகளைப் பின் தொடர்ந்து சென்று சேஷ்டைகளில் ஈடுபடுகின்றனர். இந்தச் செயல்களைத் தட்டிக் கேட்கின்ற சில பெற்றோர்களையும் பெரியவர்களையும் இவர்கள் குழுவாகச் சேர்ந்து

'எழுந்தமானமாகத்' திரிகின்ற இந்த இளைஞர், யுவதிகளில் பலர் பெற்றோரின் விருப்பங்கள், சம்மதங்கள் இல்லாமல் திருமணம் செய்துகொள்கின்றனர். இதனால் குடாநாட்டில் இளவயதுத் திருமணங்கள் அதிகரித்திருக்கின்றன. தொழில் முயற்சிகள் எதுவுமே இல்லாத நிலையில் திருமணம் செய்கின்ற இவர்கள் 18 தொடக்கம் 20 வயதுகளுக்குள் தாயாகவோ தந்தையாகவோ மாறி விடுகின்றனர். வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்வதற்குரிய அனுபவமோ

## வழி தவறும் இளைஞர்களுக்கு வழிகாட்டப்போவது யார்?

பாடு அல்லது சமூக அபிவிருத்தி என்ற பெயரில் சில பயிற்சிப் பட்டறைகளை ஒழுங்குபடுத்தி சில வாரங்கள் அல்லது சில மாதங்கள் சென்ற பின்னர் அவர்களுக்கான சான்றிதழ்களை வழங்குவதோடு, நிறுவனங்கள் தமது பணிகளை முடித்துக் கொள்கின்றன. சில நிறுவனங்கள் பயிற்சிக்குப் பின்னர் தொழில்சார் உபகரணங்களை வழங்குகின்ற போதிலும் அவர்களுக்கான தொழிற்சாலைகளை அமைத்து தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்காத நிலையில் தமது பணத் தேவைகளுக்கு அந்த உபகரணங்களையே இளைஞர், யுவதிகள் விற்கின்ற நிலையையும் அவதானிக்க முடிகின்றது. இளைஞர்,யுவதிகளுக்குப் பொருத்தமான பயிற்சிகளை இந்த நிறுவனங்கள் வழங்காமையும் இதற்கொரு காரணமாகும். இந்நிலையில், இளைஞர்,யுவதிகள் பயிற்சி பெற்ற காலங்களும் வீணாகி பெற்ற பயிற்சிகளும் பிரயோசனமற்றதாகவே அமைந்து விடுகின்றன.

இளைஞர், யுவதிகளினுடைய இந்த விடயங்களில் அரச உயர்மட்ட அதிகாரிகள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், பிரதேச செயலர்கள், கிராமங்களிலுள்ள பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் போன்றோர் கூடிய அக்கறை எடுக்க வேண்டும். கிராமப் புறங்களில் தங்கள் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்ற போது படித்த இளைஞர், யுவதிகளுக்கு மட்டுமன்றி படிக்காதவர்களைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். படிக்காதவர்கள் மட்டுமன்றி ஏனையோரும் அறிவியல் ரீதியான உண்மைகளை அறிந்து கொண்டு இந்தப் பூமியில் வாழ வேண்டியவர்கள் என்பதை எல்லோரும் உணரவேண்டும்.

**என்.பிருந்தாபன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 20 வருடங்களில் ஆக்டிக் கடலில் பனி இருக்காது

உலகின் காலநிலையைப் பொறுத்தவரை ஆக்டிக் கடல் முக்கியமான பாத்திரத்தை வகிக்கிறது. அதனால் அக்கடலை உலகின் ஏயார் கொண்டிஷனர் என்று கூட வர்ணிப்பதுண்டு.

உலகம் தொடர்ச்சியாக வெப்பமடைந்து வருவதன் விளைவாக இன்னும் 20 வருடங்களில் கோடை காலங்களில் ஆக்டிக் கடல் பனிக்கட்டிகள் அற்றதாக இருக்கும் என்றும் கடல் மட்டம் உயர்வடைந்து துருவக் கரடிகள் மற்றும் கடல் நாய் போன்ற விலங்கினங்களுக்கு ஆபத்து நேரும் என்றும் பிரிட்டிஷ் துருவ விஞ்ஞானியொருவர் கடந்த வாரம் தெரிவித்திருக்கிறார்.

ஆக்டிக் கடலின் மேலான பனிப்பாறைகளில் பெரும்பகுதி அடுத்த ஒரு தசாப்தத்தில் உருகிவிடும். ஆனாலும் இன்னும் பல நூறு வருடங்களுக்கு அந்த கடலில் குளிர் காலங்களில் பனிப்பாறைகள் தொடர்ந்து இருக்கவே செய்யும் என்று கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் சமுத்திர புவியியல் பேராசிரியரான பீற்றர் வாடாம்ஸ் கூறியிருக்கிறார்.

ஆக்டிக் கடலில் ஏற்படப்போகும் இந்த மாற்றத்தின் விளைவாக விண்வெளியில் இருந்து புகைப்படமெடுக்கும் போது உலகின் உச்சி நீலமாகத் தெரிவதற்குப் பதிலாக வெள்ளையாகவே தெரியும். ரஷ்யாவின் வடபகுதியில் கப்பல்கள் வேறு கடல் மார்க்கத்தைத் தேடவேண்டியிருக்கும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

ஆக்டிக் கடலின் பனிப்பாறைகள் உருகிவருகின்றன என்பதற்கான சான்றுகள் உலக வெப்பமயமாதலின் தெளிவான அறிகுறிகளில் ஒன்று. புதிய காலநிலை உடன்படிக்கையொன்றைச் செய்து கொள்வதற்காக எதிர்வரும் டிசம்பரில் டென்மார்க் தலைநகர் கொபன் ஹேகனில் ஐக்கிய நாடுகள் மகாநாட்டில் பங்கேற்கப் போகும் உலகநாடுகளின் தலைவர்களுக்கு இது ஒரு எச்சரிக்கையாக விளங்கும் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

ஒவ்வொரு பருவத்துக்கும் ஆக்டிக்கடலில் காணப்படக்கூடிய பனிப்பாறைகளின் அளவுகளின் மாறுதல்கள். வெப்பநிலையில் காணப்படக்கூடியதாக இருக்கும் வேறுபாடுகள். காற்று வீசும் பாணி ஆகியவற்றை அவதானித்து பெறப்பட்ட விபரங்களை அடிப்படையாகக் கொண்டே இன்னும் 20 வருடங்களில் அக்கடல் கோடை காலங்களில் பனிப்பாறைகள் அற்றதாக இருக்கும் என்ற முடிவுக்கு பேராசிரியர் வாடாம்ஸ் வந்திருக்கிறார்.

வடதுருவப் பிராந்தியத்தில் கடலின் மேலான பனிப்படலம் தொடர்பாக ஆராய்ச்சிகளைப் பொறுத்தவரை உலகின் முன்னணி நிபுணர்களில் ஒருவராக பேராசிரியர் வாடாம்ஸ் விளங்குகிறார். 2007 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் கடற்படை நீர்மூழ்கியொன்றினால் எடுக்கப்பட்ட பனிப்பாறைத் தடிப்பு அளவீட்டையும் இவ்வருட ஆரம்பத்தில் பிரிட்டிஷ் ஆராய்ச்சியாளரான பென் ஹடோவினால் மேற்கொள்ளப்பட்ட அளவீட்டையும் ஒப்பிட்டதன் பின்னரே பேராசிரியர் வாடாம்ஸ் தனது ஆய்வை மேற்கொண்டார் என்பது

# ஒரு கொலை வழக்கில் ஜூரர்களின் தீர்ப்பு

நீதிமன்றில் கொலை வழக்கு விசாரணையொன்று நடைபெற்றுக்கொண்டிருந்தது. குற்றஞ்சாட்டப்பட்டிருப்பவர் கொலை செய்தமைக்கான தெளிவான சான்றுகள் இருக்கின்ற போதிலும் கொலையுண்டவரின் சடலம் கண்டுபிடிக்கப்படவில்லை. அதனால், விசாரணையில் பெரும் சிக்கல் ஏற்பட்டது.

விசாரணையின் முடிவில் பிரதிவாதி குற்றவாளியாகக் காணப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் பலமாக இருப்பதை உணர்ந்துகொண்ட அவரின் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ஜூரர்களைப்பார்த்து பின்வருமாறு கூறினார்;

உங்களுக்கு ஒரு அதிர்ச்சியைக் கொடுக்கப்போகிறேன். கொலை செய்யப்பட்டதாகக் கூறப்பட்டவர் இன்னும் ஒருநிமிட நேரத்திற்குள்ளாக இந்த நீதிமன்றத்துக்குள் பிரவேசிக்கப்போகிறார். வாயிற் கதவை எல்லோருமே பார்த்துக்கொண்டிருங்கள்.


வழக்கறிஞர் இவ்வாறு கூறிவிட்டு கதவை நோக்கிப் பார்த்துக்கொண்டார். மன்றில் கூடியிருந்தவர்களும் ஜூரர்களும் கூட வியப்புடன் கதவைப் பார்த்துக்கொண்டிருந்தனர். ஒரு நிமிடம் கடந்துவிட்டது. எவருமே நீதிமன்றத்திற்குள் பிரவேசிக்கவில்லை.

நான் கூறியதைக் கேட்டு நீங்கள் எல்லோருமே வாயிற் கதவை எதிர்பார்ப்புடன் நோக்கிக் கொண்டிருந்தீர்கள். அதனால், இந்த வழக்கில் புதியதொரு சந்தேகம் கிளம்பியிருக்கிறது. அதாவது, எனது கட்சிக்காரரால் கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் நபர் உண்மையிலேயே இறந்துவிட்டார் என்பதை உறுதியாக நீங்கள் அறிந்திருந்தால், கதவை நோக்கிப் பார்த்திருக்கமாட்டீர்கள். அதனால், கொலை உண்மையில் இடம்பெற்றதா இல்லையா என்பதையே தீர்மானிக்க முடியாத நீங்கள் எவ்வாறு சரியான தீர்ப்பைக்கூறப் போகிறீர்கள் என்று வழக்கறிஞர் கேட்டார்.

தனியான அறையொன்றுக்குள் சென்று ஆலோசனை நடத்திவிட்டு நீதிமன்றத்திற்குள் வந்த ஜூரர்கள் 'குற்றவாளிக் கூண்டில் நிற்கும் பிரதிவாதி கொலை செய்திருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது' என்று தீர்ப்புக் கூறினார்.

வழக்கறிஞர் கேட்டார் உங்கள் தீர்ப்புக்கான அடிப்படை என்ன?

ஜூரர்கள் கூறினார்கள்; கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படுபவர் நீதிமன்றத்திற்குள் வரப்போவதாக நீங்கள் கூறியவேளையில் நாமெல்லோரும் கதவை நோக்கிப் பார்த்துக்கொண்டிருந்தோம். ஆனால், பிரதிவாதி கதவுப்பக்கமாகத் திருப்பிப் பார்க்கவேயில்லையே!



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



வெளிநாடுகளில் வர்த்தகத் துறையில் ஈடுபடுபவர்களில் இந்தியர்களே மிகவும் கூடுதலான அளவில் ஊழல் மோசடிகளில் ஈடுபடுபவர்களாக இருக்கிறார்கள் என்று ஊழலுக்கு எதிரான அரசசார்பற்ற சர்வதேச தொண்டர் நிறுவனமான ட்ரான்ஸ் பரென்ஸி இன்டர் நாஷனலின் இந்தியப் பிரிவு மேற்கொண்ட ஆய்வொன்றின் மூலமாகத் தெரியவந்திருக்கிறது.

ட்ரான்ஸ் பரென்ஸி இன்டர் நாஷனல் இந்தியப் பிரிவு ஆய்வின் முடிவில் 'உலகளாவிய ஊழல் அறிக்கை 2009: ஊழலும் தனியார் துறையும்' என்ற தலைப்பில் அறிக்கையொன்றைக் கடந்த வாரம் வெளி

# வெளிநாடுகளில் வர்த்தகம் செய்யும் இந்தியர்கள் மோசமான ஊழல் பேர்வழிகள்

யிட்டிருக்கிறது.

உலகளாவிய ரீதியில் வர்த்தகத்தில் இந்தியக் கம்பனிகளும் சீனக் கம்பனிகளும் துடிப்பான பங்கையாற்றி வருகின்றன. ஆனால், வெளிநாடுகளில் வர்த்தகத்தில் ஈடுபடும்போது இக் கம்பனிகள் இலஞ்சத்தைக் கொடுப்பதிலும் எடுப்பதிலும் மூழ்கியிருக்கின்றன. சந்தைகளில் போட்டியை ஊக்குவிக்கின்ற அதேவேளை, பாவனையாளர்களின் நலன்களையும் பாதுகாப்பதற்காக இந்தியாவில் 2002 ஆம் ஆண்டில் வர்த்தகப் போட்டிச் சட்டம் ஒன்று கொண்டுவரப்பட்ட போதிலும் அதனால் பயன்கிடைக்கவில்லை என்று ட்ரான்ஸ் பரென்ஸி இன்டர் நாஷனலின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

உலகம் பூராவும் 2742 வர்த்தகத்துறை நிறைவேற்று அதிகாரிகள் இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களின் 30 சதவீதமானவர்கள் வெளிநாட்டு வர்த்தகர்களைப் பொறுத்தவரை இந்தியர்களே மிகவும் ஊழல்தனமானவர்கள் என்று அறிக்கையில் கூறப்படுகின்றது.

பல்வேறு நாடுகளையும் சேர்ந்த வர்த்தகப் பிரமுகர்களின் நடவடிக்கைகள் தொடர்பில் 26 நாடுகளைச் சேர்ந்த (ஒவ்வொரு நாட்டிலிருந்தும் குறைந்தபட்சம் 100 பேர்) சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரிகளிடம் கேள்விகள் கேட்கப்பட்டன. இந்தியக் கம்பனிகள் அவற்றின் அலுவல்களைத் துரிதமாக செய்வித்துக்கொள்வதற்காக வெளிநாடுகளின் அரசாங்க அதிகாரிகளுக்கு இலஞ்சத்தைத் தாராளமாகக் கொடுக்கின்றன என்று அந்த சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரிகளில் 30 சதவீதமானவர்கள் கூறியிருக்கிறார்கள்.

# அமெரிக்காவில் இந்தியர்களின் வீடுகளை இலக்குவைக்கும் திருடர்கள்

அமெரிக்காவில் திருடர்கள் இப்போது இந்திய அமெரிக்கர்களின் வீடுகளிலேயே கொள்ளையடிப்பதில் கூடுதல் அக்கறை காட்டுகிறார்களாம். இதற்குக் காரணம் இந்தியர்களின் வீடுகளில் கூடுதலான தங்க நகைகள் இருப்பதேயாகும்.

வழமையாக அமெரிக்காவில் இலத்திரனியல் பொருட்களே களவாடப்பட்டு வந்தன. தற்போது அந்தப் போக்கை மாற்றியிருக்கும் திருடர்கள் இந்தியர்களின் வீடுகளிலும் ஏனைய தெற்காசிய நாட்டவர்களின் வீடுகளிலும் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்திருப்பதாக அமெரிக்கப் பொலிஸார் தெரிவிக்கிறார்கள்.



தங்கத்தின் விலை இப்போது கடுமையாக உயர்ந்திருப்பதால் ஒருசில தங்க நகைகளைத் திருடினாலே சில நாட்களுக்கு சமாளிக்க முடியும் என்று திருடர்கள் நம்புகிறார்கள் போலும்.

இந்தியர்களின் வீடுகளை இலக்குவைக்கும் அமெரிக்கத் திருடர்கள் களவாடும்போது கூட பெறுமதி மிக்க நகைகளை மாத்திரம் தெரிவுசெய்து எடுத்துச் செல்வதாக வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

22 கரட் அல்லது அதற்கும் கூடுதலான கரட் தங்க நகைகளுக்கு திருடர்கள் மத்தியில் நல்ல மவுசு. தங்க நகைகளுடன் சேர்ந்து வெள்ளி நகைகள் வைக்கப்பட்டிருந்தால் தங்க நகைகளை மாத்திரம் அந்தத் திருடர்கள் எடுத்துச் செல்கிறார்கள் என்று வாஷிங்டனில் இந்தியர்கள் பெருமளவில் வாழும் பகுதியில் உள்ள பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியொருவர் வாஷிங்டன் போஸ்ட்டுக்கு கூறியிருக்கிறார்.

கடந்த சில வாரங்களில் மாத்திரம் நூற்றுக்கும் அதிகமான இந்திய அமெரிக்கர்களின் வீடுகள் உடைக்கப்பட்டு நகைகள் திருடப்பட்ட சம்பவம் குறித்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதாக பொலிஸார் ஊடகங்களுக்குக் கூறியிருக்கிறார்கள்.

பெருமளவு தங்க நகைகள் இருக்கக்கூடிய வீடுகளை எவ்வாறு திருடர்கள் இனம்கண்டு தங்கள் கைவரிசையைக் காட்டுகிறார்கள் என்பதைப் புரியாமல் பொலிஸார் தடுமாறுகிறார்களாம்.

ஃபெயர்பாக்ஸ் பகுதியில் தனது வீட்டை உடைத்துத் திருடர்கள் நகைகளை எடுத்துச் சென்ற சம்பவம் குறித்து கடந்த வியாழனன்று பொலிஸ் நிலையத்தில் முறையிடச் சென்ற அமெரிக்க இந்தியரான ராமன் குமார் என்பவர் தங்கத்திலான லக்ஷ்மி விக்கிரகத்தை எடுத்துச் சென்றிருக்கும் திருடர்கள் அதற்கு பக்கத்தில் இருந்த லப்டொப்பை விட்டுச்சென்றிருக்கிறார்கள் என்று கூறினார்.

# வழக்கறிஞர்களும் சுறாக்களும்



ஒரு டாக்டர், ஒரு மதகுரு, ஒரு வழக்கறிஞர் மூவரும் நல்ல நண்பர்கள். வார இறுதி நாட்களில் மாலைப் பொழுதில் அநேகமாக அவர்கள் ஒன்றாகவே பொழுது போக்குகளில் ஈடுபடுவது வழக்கம்.அடிக்கடி சுற்றுலாவும் மேற்கொள்வார்கள்.

ஒரு நாள் மாலைப் பொழுதில் மூவரும் மீன்பிடிப்படகொன்றில் ஏறி ஆற்றில் சென்று கொண்டிருந்தார்கள். ஆற்றின் நடுவில் படகின் இயந்திரம் பழுதடைந்து விட்டது. துடுப்பும் தவறுதலாக ஆற்றுக்குள் வீழ்ந்து விட்டது. படகைச் சூழ பல சுறாமீன்களும் காணப்பட்டன.

ஆற்றில் பாய்ந்து துடுப்பை எடுத்து வருவது யார் என்பதில் மூவருக்குள்ளும் தகராறு மூண்டது. மதகுருவும் வழக்கறிஞரும் சேர்ந்து டாக்டரை ஆற்றில் குதித்து துடுப்பை எடுத்து வருமாறு கேட்டார்கள். அதற்கு மறுத்த டாக்டர். இந்தச் சுறாக்கள் உங்களில் யாரையாவது கடித்தால் சிகிச்சை செய்ய நான் வேண்டுமல்லவா. அதனால், என்னால் குதிக்க முடியாது' என்றார்.

மதகுரு சொன்னார். 'என்னாலும் ஆற்றுக்குள் குதிக்க முடியாது. ஏனென்றால், டாக்டரின் சிகிச்சை பயனளிக்காமல் எவராவது இறக்க நேர்ந்தால் அவரின் இறுதிச் சடங்கைச் செய்வதற்கு நான் வேண்டுமல்லவா?'


'சரி நீங்கள் இருவருமே குதிக்க வேண்டாம். நானே குதித்து துடுப்பை எடுத்து வருகிறேன்' என்று கூறியபடி வழக்கறிஞர் ஆற்றுக்குள் பாய்ந்தார். அவர் பாயும் போது படகைச் சூழநின்ற சுறாக்களும் விலகிச் சென்றன. வழக்கறிஞர் துடுப்பை மீட்டு எடுத்துக் கொண்டு படகில் ஏறினார்.

டாக்டரும் மதகுருவும் திகைத்துப் போனார்கள். வழக்கறிஞர் சிரித்துக் கொண்டே சொன்னார் 'நான் ஒரு வழக்கறிஞர் என்பதால் சுறாக்கள் எனக்கு தொழில் நிமித்தமான மரியாதையைக் (Professional Courtesy) காட்டுவதற்காகவே விலகிச் சென்றன'.

வழக்கறிஞர்களும் சுறாக்களும் எந்தவகையில் தொழில் நிமித்தம் தொடர்பு? உங்களுக்கு புரிகிறதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம் பெண்களுக்கு இதயத்தால் ஆபத்து!



அனைத்து துறைகளிலும் ஆண்களுக்கு நிகராக முத்திரை பதித்து வரும் இன்றைய இளம்பெண்களுக்கு ஒரு சவாலாக இருப்பது இதயத் தாக்குதல் தான். நாம் இளமையாக இருக்கிறோம். உடல் நலத்தோடு இருக்கிறோம்... இதற்கு மேல் ஒரு பெண்ணாகவும் இருக்கிறோம் என்று நீங்கள் நினைத்தாலும் இதயத்தாக்குதல் என்பது உங்களை நோக்கி வந்துகொண்டிருக்கும் ஒரு சிக்கல் என்று எச்சரிக்கிறார்கள் மருத்துவ ஆய்வாளர்கள்.

இளம்பெண்களுக்கு இதயம் தொடர்பான பிரச்சினைகளா? என்று நீங்கள் நினைப்பது தவறு. பெண்கள் உயிரைப் பழிவாங்குவதில் இதய நோய்கள் முதலிடத்தில் உள்ளது என்று மிரட்டுகிறது ஒரு ஆய்வு. பெண்களுக்கு இதய நோயின் அறிகுறிகள் இருபது வயதிலேயே தோன்றத் தொடங்கி விடுகிறது என்றும் அந்த ஆய்வு அதற்கான காரணிகளையும் கூறுகிறது.

*இறப்பில் முடிகின்ற இதய நோயாளிகளில் பாதிப்பேர் பெண்கள்.

* இதயத்தாக்குதல் ஏற்பட்டதும் இறந்து போகக்கூடிய சாத்தியக்கூறு ஆண்களை விட பெண்களுக்கு இரு மடங்கு அதிகமாக உள்ளது.

* பத்தில் ஒரு பெண்ணுக்குத் தான் மார்பகப்புற்று ஏற்பட வாய்ப்பிருக்கிறது.ஆனால், மூன்றில் ஒரு பெண்ணுக்கு அவளது வாழ்நாளில் இதய நோய் ஏற்பட வாய்ப்புள்ளது. எல்லா வகையான புற்று நோய்களிலும் இறக்கும் பெண்களைப் போல் இரு மடங்கு பெண்கள் இதயத் தாக்குதலினால் இறக்கின்றனர்.

ஏற்கனவே ஏ.எச்.ஏ.எனப்படும் அமெரிக்கன் இதய சங்கம் (அமெரிக்கன் ஹார்ட் அசோசியேஷன்) இது குறித்து எச்சரித்துள்ளது. அத்துடன், இதற்காகவே மகளிர் இதய நோய் செயற்குழு ஒன்றையும் அமைத்துள்ளது.

நடைமுறையில் இதய நோய்கள் பற்றிய ஆராய்ச்சி முழுவதும் ஆண்களை சுற்றிச் சுழல்கிறது.இதன் விளைவாக இதய நோயினால் பெண்களுக்கு நேருகின்ற இன்னல்கள் இருட்டடிப்பு செய்யப்பட்டு விட்டன. பெண்களுக்கு ஏற்படுகின்ற இதயக் கோளாறுகளில் அக்கறை காட்டப்படாதது எதனால் என்ற கேள்வியும் எழுகிறது.

இதயத் தமனிக் கோளாறுகள் ஆண்களை விட வயது முதிர்ந்த நிலையிலேயே பெண்களுக்கு ஏற்படுவது இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம் என்கிறார் அமெரிக்க குடும்ப மருத்துவர்கள் அகடமியைச்சேர்ந்த டாக்டர் டொனால் கீத்.

பெண்களின் உடலில்சுரக்கின்ற எஸ்ட்ரோஜன் ஓமோன் நல்ல கொழுப்புடன் உற்பத்தியை உயர்த்தி உடலுக்கு பாதுகாப்பளிக்கிறது. மாதவிடாய் நிற்கும் வேளையில் எஸ்ட்ரோஜன் சுரப்பில் ஏற்படுகின்ற வீழ்ச்சி அவர்களை இதய நோய்களுக்கு இலக்காக்கி விடுகிறது என்றும் இவர் கூறுகிறார். அறுபத்தைந்து வயதாகின்றபோது இதயத்தாக்கு ஏற்படும் வாய்ப்பு ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே அளவில்தான் இருக்கிறது.

அறுபத்தைந்து வயது தானே ஆகிறது? அதற்குள் என்ன என்று கவனமின்மையாக இருக்கக்கூடாது.இப்போதிலிருந்தே சில வாழ்க்கை முறை மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டால் இதயம் தொடர்புடைய இன்னல்கள் பலவற்றைக் குறைத்து விடலாம்.

கொழுப்பை முடிந்த அளவுக்கு உணவிலிருந்து நீக்கி விடுவது நல்லது. ஆறு மாதங்களுக்கு ஒருமுறை இரத்த அழுத்தத்தையும் கொழுப்பையும் அளவையும் சோதித்துக் கொள்ளுங்கள்.

வீட்டிலும் அலுவலகம் மற்றும் வேலை பார்க்கும் இடங்களில் மன இறுக்கமும் பதற்றமும் இன்றி இயல்பாக வேலை பார்ப்பது முக்கியம். எளிமையான உடற்பயிற்சிகள் நடைப் பயிற்சிகள் செய்து வாருங்கள். உடற்பயிற்சி செய்து உடலை நல்ல செயல்பாடுகளோடு வைத்திருப்பவர்கள் இளமையுடன் மற்றவர்களை விட அதிக நாட்கள் வாழ்கிறார்கள் என்று ஆய்வுகள் கூறுகின்றன.

எவராலும் எப்போதும் இளமையாக இருக்க முடியாது. ஆயினும் தேவையற்ற மெனக்கெடல்களை செய்யாமல் தவிர்த்து விடுவது நல்லது.

பெண்களுக்கு ஏற்படும் இதயக் கோளாறுகளில் மூன்றில் ஒரு பங்கு அதிக எடை கொண்ட பெண்களுக்கே ஏற்படுகிறது. ஐந்தாறு கிலோ எடை கூடுதலாக இருந்தாலும் அதற்கான தொல்லையை அது உண்டாக்கி விடுகிறது. பொஸ்டனிலுள்ள பெண்கள் மருத்துவமனையும் மெட்ரோபாலிடன் இன்ஷூரன்ஸ் நிறுவனமும் இணைந்து நடத்திய ஆய்வில் சராசரி எடையை விட அதிகமான எடை கொண்டிருந்த பெண்களுக்கு இதய நோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் மற்றவர்களைவிட 80 சதவீதம் அதிகமாக இருந்தது.

சி.டி.சி.எனப்படும் நோய்த் தடுப்பு மையம் இளம் பெண்களுக்கான எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது. ஆண்களும் பெண்களும் தங்களது 25 வயது தொடங்கி 35 வயது வரையிலான கால இடைவெளியில் தான் அதிக அளவில் சதை போடுகிறார்கள். அதிலும், குறிப்பாக பெண்களின் எடை அதிகரிப்பதற்கான வாய்ப்பு ஆண்களை விட இருமடங்கு அதிகமாகவுள்ளது என்று மருத்துவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## வில்லங்கமான சிகிச்சை

ஹிப்னாடிசம் [வசியம்] மூலம் உங்களது மார்பகங்களைப் பெரிதாக்கலாம். விரும்புவோர் என்னிடம் வாருங்கள் என்று சிடி வெளியிட்டு செய்தி அறை கூவல் விட்டுள்ளார் இங்கிலாந்தைச் சேர்ந்த டேவிட் நைட் என்கிற ஹிப்னாடிச நிபுணர்.

மார்பகப் பெருக்கல் முயற்சிகளில் இதுவரை 85 சதவீதம் பேருக்கு பெரிதாக்கி வெற்றியும் பெற்றுள்ளாராம் நைட். வழக்கத்தை விட சற்று பெரிதாக அவர்களது மார்பகங்கள் மாறியிருக்கிறதாம். பெருமை பொங்கச் சொல்கிறார் நைட். இது தொடர்பாக ஒரு சிடியையும் வெளியிட்டுள்ளார். அதில், கவனியுங்கள் உங்களது மார்பகங்கள் வளருகின்றன, பெரிதாக வளருவதைப் பாருங்கள் என்று போதனை செய்கிறார் லநட்.

ஒருவேளை திருப்திகரமான முறையில் அளவு கூடாவிட்டால், வாங்கிய பணத்தை திருப்பிக் கொடுத்து விடுவாராம் நைட். இது எப்படி சாத்தியம் என்று அவரிடம் கேட்டால், எனது வார்த்தைகளை மனதில் வாங்கிக் கொள்ளும் பெண்களுக்கு நம்பிக்கையும், மார்பக பெருக்கமும் அதிகரிக்கிறது. தொய்வுகள் சரிவாகி அவை நேர்த்தியாக மாறுகின்றன. பெரிதாகின்றன. உண்மையில் பெண்களின் மார்புகளின் வளர்ச்சிக்கு, அவர்களது மனம் தான் காரணம். மனம் சரியானால் மார்புகளும் சரியாகும். மனம் விசாலமடைந்தால் மார்புகளும் விசாலமடையும் என்று பாடம் நடத்துகிறார். நான் செய்வது மனதை விசாலப்படுத்துவதுதான். அதை செய்யும் போது தானாகவே மார்புகளும் வளர்ந்து விடுகின்றன.

ஆனால், இந்த 'பூப்ஷோ' எல்லாம் 'டூப்' என்று பி.பி.ஸி.யில் நடந்த ஒரு நிகழ்ச்சியின் மூலம் உடைத்து விட்டனர். அப்படியும் நைட் கீழே விழவில்லை- அவர்கள் செய்த முறைப்படி செய்தால் நிச்சயம் மார்பு பெரிதாகாது. அவர்களது முறை சரியல்ல என்று கூறி சமாளித்து விட்டார். மார்பு பெருக்கிறதோ இல்லையோ, நிச்சயம் நைட்டின் வங்கிக்கணக்கு பெரிதாகியிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவம்

# ருபெல்லா தடுப்பூசி ஏற்றல் ஆபத்தானதா...?

இலங்கையானது ஒரு வளர்ந்து வரும் நாடாக இருந்த போதிலும் அதன் வாழ்க்கைத் தர சுட்டெண் ஆனது உன்னத நிலையிலுள்ள நாடாகக் காணப் படுவதுடன் தெற்காசியப் பிராந்தியத்தில் பல சுகாதாரம் சார்ந்த காட்டிகள் நல்ல நிலையில் உள்ள நாடாகும். இருந்த போதிலும் இலங்கையானது தொற்றுநோய்கள் மற்றும் தொற்று நோய் அல்லாத நீண்டகால நோய்களினாலும் பாதிக்கப்பட்ட நாடாகக் காணப்படுகின்றது.

மக்கள் பல்வேறுபட்ட புதிய தொற்று நோய்களினாலும் முன்னரே காணப்பட்ட நோய்களின் மீள் தொற்றுதலினாலும் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஒரு தொற்று நோயை இல்லாது செய்ய வேண்டின் அல்லாது தடுக்க வேண்டின் அத்தொற்று நோயை உருவாக்கும் காரணியை இல்லாது செய்தல் அல்லது தொற்று நோய் ஏற்படுத்தும் உயிரங்கி வாழக்கூடிய சூழலை இல்லாது செய்ய வேண்டும்.



நாம் பொதுவாக நோயாக்கியின் இருப்பை இல்லாது செய்ய தடுப்பூசிகள் (vacana) பாவிக்கின்றோம். தடுப்பூசிகளினை பாவிப்பதன் மூலம் பல்வேறு நோய்களின் நோய்த்தாக்கத்தை குறைத்திருப்பது நாம் எல்லோரும் அறிந்த உண்மை. இதற்கு நல்ல உதாரணம் அம்மை நோயாகும். அம்மை நோயை ஏற்படுத்தும் கிருமியானது தற்போது உலகை விட்டு முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. இன்னொரு வெற்றிகரமான நடவடிக்கையானது இளம்பிள்ளை வாத நோயானது ஒழிக்கப்பட்டதாகும். இலங்கையில் 1993 ஆம் ஆண்டிற்கு பின்னர் இளம்பிள்ளைவாத நோயுடன் ஒருவரும் கண்டு பிடிக்கப்படவில்லை.

நோய்களிற்குத் தடுப்பூசிகளைப் பாவித்தல் என்பது தொற்று நோய்களைக் கட்டுப்படுத்த இன்றியமையாதது. தற்போது பல நோய்களிற்கு தடுப்பூசிகள் ஏற்றப்படுகின்றன. இன்னும் பல நோய்களிற்கு புதிய தடுப்பூசிகள் அறிமுகப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தெற்காசிய பிராந்தியத்தில் இலங்கையானது மக்களுக்குத் தேவையான தடுப்பூசி வழங்கும் செயற்பாட்டில் ஒரு வெற்றிகரமான நாடாகும். ஆனால், கடந்த சில மாதங்களாக இலங்கையின் சுகாதாரத்துறையானது தடுப்பூசி ஏற்றும் செயற்பாட்டில் பாரதூரமான பிரச்சினைகளை எதிர் நோக்கி வருகின்றது.

கடந்த வருடம் அறிமுகப்படுத்தப்பட்ட பென்ராவல்ன்ற் (pentavalent) எனப்படும் ஐந்து ஊசிகள் கொண்ட தடுப்பூசித் திட்டம் பல்வேறுபட்ட தடுப்பூசி ஏற்றியபின் ஏற்படும் பாதகமான நிகழ்வுகளின் அறிவுப்புகளினால் நிறுத்தப்பட்டது. பின்னர் இவ் ஆண்டு மாசி மாதம் ருபெல்லா (Rubella) என்ற யேமன் சின்னமுத்துத் தடுப்பூசி ஏற்றப்பட்ட 27 மாணவர்கள் மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஒரு மாணவி இறக்க நேரிட்டது. இது குறித்து நிகழ்வின் பின்னர் சுகாதார அமைச்சினால் யேமன் சின்னமுத்து தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையானது நிறுத்தி வைக்கப்பட்டது. பின்னர் மீண்டும் தடுப்பூசியினைப்பற்றிய பல்வேறுபட்ட ஆய்வுகளுடன் மற்றும் தடுப்பூசி ஏற்றும் போது ஏற்படும் பாதகவிளைவுகளைத் தடுக்கும் அறிவுரைகளுடன் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கு பின்னரும் யாழ்ப்பாணத்தில் இரண்டு மாணவிகளும், வாரியபொல என்னும் இடத்தில் மூன்று மாணவிகள் ருபெல்லா தடுப்பூசி ஏற்றியபின் ஏற்படும் பாதகவிளைவுகளினால் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு ஒரு சிறுமியின் இழப்பிற்குக் காரணமானது.

யேமன் சின்னமுத்துத் தடுப்பூசி ஏன் ஏற்றப்படுகின்றது என்பதனை ஆராய்வோமானால் இன்றைய இத் தடுப்பூசி நிகழ்ச்சித் திட்டமானது இரு குறிக்கோளை அடைவதற்காக ஏற்றப்படுகின்றன. ஒன்று யேமன் சின்னமுத்தினால் பிறக்கும் குழந்தைகளில் ஏற்படும் பிறப்புக் குறைபாடுகளை இல்லாது செய்வதற்கும் மற்றும் யேமன் சின்னமுத்து நோய் ஏற்படாது தடுப்பதற்கும் ஆகும்.

முதலில் பிறப்புக் குறைபாடுகளை இல்லாது செய்வதற்காக 11-44 வயதிற்கு இடைப்பட்ட பெண்களிற்கு மட்டுமே இத்தடுப்பூசியானது ஏற்றப்பட்டது. இது பெண் ஒருவர் கர்ப்பம் தரிக்கும் போது யேமன் சின்னமுத்துவினால் பாதிக்கப்படும் சந்தர்ப்பத்தைக் குறைக்கும். 1995 ஆம் ஆண்டு மேற்கொண்ட ஆய்வில் 1994 ஆம் ஆண்டில் 275 யேமன் சின்னமுத்து பிறப்பு குறைபாடுகளும் 1995 இல் முதல் நான்கு மாதங்களில் 169 நோயாளிகளும் கண்டு பிடிக்கப்பட்டனர். அத்துடன், ஒரு தாய் கர்ப்பம் தரிக்கும் போது முதல் மூன்று மாதத்திலும் யேமன் சின்னமுத்துவினால் ஒரு தாயார் பாதிக்கப்படும் போது அத்தாயாரிற்கு பிறக்கும் குழந்தை பிறப்பு குறைபாட்டுடன் பிறப்பதற்கு 85% சாத்தியப்பாட்டைக் கொண்டுள்ளது.



பின்னர் யேமன் சின்னமுத்து நோயை முற்றாக ஒழிப்பதற்காக இத்தடுப்பூசியானது மூன்று வயதில் சின்னமுத்து ஊசியுடன் 13 வயதில் தனிய யேமன் சின்னமுத்து தடுப்பூசியாகவும் ஏற்றப்பட்டு வருகின்றது.

எனவே, இத்தடுப்பூசியினை ஏற்றுவது ஒரு முக்கியமானது. ஏனெனில், குறைபாடுகளுடன் பிறக்கும் குழந்தைகளை குறைத்தல் வேண்டும். ஆனால், இத்தடுப்பூசியினால் ஏற்படும் பாதகவிளைவுகள் தடுக்கப்படுதல் வேண்டும். அதற்குத் தரமான தடுப்பூசியை வழங்குவது சுகாதாரத்துறையின் கடமையாக இருக்கையில் அதனை சரியாக பாவிப்பது நம் எல்லோரையும் சார்ந்தது. இதற்கு சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள் மக்களும் தடுப்பூசிகள் பற்றியும் அதன் நன்மைகள், பாதகவிளைவுகள் மற்றும் பாதக விளைவுகள் ஏற்படாது தடுத்தல் பற்றி அறிந்து இருத்தல் அவசியமாகின்றது. நாம் எமது பிள்ளைகளிற்கு அல்லது வருங்கால சந்ததிக்கு சரியானதைச் செய்தல் அவசியமாகின்றது. எனவே, சரியான இலக்கை அடைய கடுமையாக உழைக்கவேண்டும்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை நாம் மேலும் கடினமாக உழைக்க வேண்டியுள்ளது. ஏனெனில், இன்றும் பல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் வைத்தியர்கள் மற்றும் பொது சுகாதார தாதிகள் இன்றி செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவ் வெற்றிடங்களை நிரப்புவதன் மூலம் மாத்திரமே நாம் பாதுகாப்பான தடுப்பூசி ஏற்றல் சேவையை வழங்குவதுடன் மக்களை விளிப்படையச் செய்ய முடியும். இளம் மருத்துவர்கள் இதனை கருத்தில் எடுத்து தமக்கு இலவசக் கல்வி கற்க உதவிய சமூகத்திற்கு உதவுதல் அவசியமாகின்றது. அனைவரும் கடுமையாக உழைத்தால் தொற்று நோய்களை இல்லாது செய்யலாம்.

வைத்திய கலாநிதி
இ.சுரேந்திரகுமாரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘சல்மான் ருஷ்தி ஒரு செயலிழந்த பிறவி’

இந்தியாவில் பிறந்தவரான பிரபல பிரிட்டிஷ் எழுத்தாளர் சல்மான் ருஷ்தி அவரது எழுத்துக்காக பெயரெடுத்ததைப் போன்று அடிக்கடி மனைவிமாரை மாற்றிக் கொள்வதற்கும் பெயரெடுத்தவர் என்று சொல்லலாம்.

உண்மையில் அவருக்கு எத்தனை பெண்களுடன் தொடர்பு இருந்தது, எத்தனை பேரை சட்டரீதியாகத் திருமணம் செய்து வாழ்ந்தார் என்பதைச் சரியாகக் கூறுவது கஷ்டமே. இறுதியாக சல்மான் ருஷ்தி அமெரிக்க நடிகை பியா கிளெனைக் காதலித்தார். அவருடன் சேர்ந்து வாழவும் செய்தார். குறுகிய கால தொடர்புக்கு பின்னர் கிளெனை ருஷ்தி கைவிட்டுவிட்டார்.

கிளென் இப்போது ருஷ்தியைப் பற்றி கடுமையான விமர்சனங்களைச் செய்ய ஆரம்பித்திருக்கிறார். ருஷ்தி ஒரு கோழை. பக்குவமில்லாதவர். செயலிழந்தவர் என்றெல்லாம் நடிகை லண்டனின் ‘மெயில்’ பத்திரிகைக்கு இவ்வாரம் வழங்கிய பேட்டியொன்றில் கூறியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

‘என்னிடமிருந்து எதை ருஷ்தி விரும்பினாலும், அதைப் பற்றி அவர் நேர்மையாக நடந்து கொள்ளவேமாட்டார். அவர் ஒரு செயலிழந்த பிறவியாகிவிட்டார்’ என்று கிளென் அந்தப் பத்திரிகைக்குக் கூறியிருக்கிறார்.


அரசியல் தலைவர்களைக் கேலி செய்யும் தொலைக்காட்சி நாடகமொன்றில் முன்னாள் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொண்டோலீசா ரைஸ் போல் டான்சிங் செய்வதுபோன்று நடந்ததன் மூலமாக பியா கிளென் பிரபல்யமடைந்தார். 2007 ஆம் ஆண்டு கிளெனை ருஷ்தி முதன் முதலாகச் சந்தித்தார். ஒருவருடமாக தன்னை அவர் தொடர்ந்த பின்னர் தானும் சிலரைக் காதலித்ததாக கிளென் கூறுகிறார்.

ருஷ்தியுடனான தொடர்புக்குப் பிறகு கடந்த ஜனவரியில் கிளென் நியூ யோர்க் வீட்டில் குடியேறினார். இத்தாலிக்கும் லண்டனுக்கும் இறுதியாக ஒன்று சேர்ந்து சுற்றுலா மேற்கொண்ட பிறகு மூன்று மாதங்களுக்கு முன்னர் ருஷ்தி அந்த ந கையுடனான தொடர்பை ஒரு ஈ- மெயில் கடித அறிவிப்பி மூலமாக துண்டித்துக் கொண்டார்.

‘சாத்தானின் வசனங்கள்’ என்ற தனது நாவலில் முஹம்மது நபியை நிந்தனை செய்ததாக ருஷ்தியை இஸ்லாமியர்கள் வெறுத்தார்கள். காலஞ் சென்ற ஈரானிய அதியுயர் மதத் தலைவர் யத்தொல்லா கொமெய்னி ருஷ்திக்கு மரண தண்டனையையும் விதித்தார். அதையும் பொருட்படுத்தாமல் துணிச்சலுடன் தொடர்ந்தும் தனது படைப்புகளை வெளியிட்டு வந்தமையினால் ருஷ்திக்கு மேற்குலகில் பெரு வரவேற்பு கிடைத்தது. இங்கிலாந்து சேர் பட்டமும் வழங்கிக் கௌரவித்தது.

‘ருஷ்தி எப்போதுமே சொந்தத் திருப்தியைப் பற்றியே அக்கறை கொண்டிருப்பார். எனது வாழ்வின் பல மாதங்களை அவர் விரயமாக்கிவிட்டார். ஈ- மெயில் மூலமான உறவைத் துண்டிப்பதைப் போன்ற கோழைத்தனம் வேறு ஏதாவது உலகில் இருக்க முடியுமா?’ என்று நடிகை கிளென் கேட்கிறார்.

ஆனால், ருஷ்தியோ நடிகையின் குற்றச்சாட்டுகளை அடியோடு மறுக்கிறார். ‘கிளென் பிரபல்யமடைய வேண்டுமென்று துடிக்கும் ஒரு இளம் நடிகை. மற்றையவர்களின் கவனத்தைப் பெற வேண்டுமென்பதற்காக அவர் எதையுமே செய்வார். என்னுடனான தனது உறவு குறித்தும் எனது அபிப்பிராயங்கள், மனோபாவம் பற்றியெல்லாம் கிளென் கூறுவது சகலதுமே தவறானவை. எவ்வாறிருந்தாலும் அந்த நடிகை நன்றாக வாழ நான் வாழ்த்துகிறேன்’ என்று கூறியிருக்கிறார்.





# பெட்டகத்திற்குள் கோழி முட்டைகள்

ஒரு கணவனும் மனைவியும் தங்களது திருமண வாழ்வின் 30 ஆவது வருட நிறைவைக் கொண்டாடினார்கள்.

திருமணம் செய்த நாள் முதலாக மனைவி ஒரு பெட்டகத்தை வைத்திருந்தார். ஆனால், கணவனை ஒரு நாளுமே அதைப் பார்க்க அனுமதிப்பதில்லை. பெட்டகத்தைப் பூட்டி திறப்பை எப்போதுமே தன்வசம் வைத்திருப்பார் மனைவி. திருமண வாழ்வின் 30 ஆவது வருட நிறைவுக் கொண்டாட்டங்கள் முடிவடைந்து விருந்தினர்கள் சகலரும் போய்விட்ட பின்னர் கணவன்- மனைவியிடம் இரக்காத குறையாகக் கேட்டார். ‘அந்தப் பெட்டகத்துக்குள் என்ன இருக்கிறது என்பதை இன்றைக்காவது நான் பார்க்கலாமா?’ என்று.

மனைவியும் அதற்குச் சம்மதித்துப் பெட்டகத்தைத் திறந்து கணவனுக்குக் காட்டினார். அதற்குள் 10 ஆயிரம் ரூபா காசும் மூன்று கோழி முட்டைகளும் இருந்தன.

முட்டைகளை எதற்காக இந்தப் பெட்டகத்திற்குள் வைத்திருக்கிறீர்கள் என்று மனைவியை வினவினார் கணவன்.

உண்மையைச் சொல்கிறேன். உங்களுக்கு முற்று முழுதான விசுவாசமாக நான் வாழ்க்கையில் நடந்து கொள்ளவில்லை. வெளியில் சென்று தவறாக நடந்து கொள்ளும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒரு முட்டையை இந்தப் பெட்டகத்துக்குள் வைப்பதை வழக்கமாக்கிக் கொண்டேன் என்று பதிலளித்தார் மனைவி.

சில நிமிடங்கள் யோசனை வயப்பட்டவராக நின்ற கணவன் ‘சரி, மூன்று முட்டைகள் தானே, அவை வைக்கப்பட்டிருப்பதைப் பற்றி நான் பெரிதாகக் கவலைப்படவில்லை. ஆனால், இந்த 10 ஆயிரம் ரூபா பணம் எப்படி வந்தது?’ என்று கேட்டார்.

அதற்கு மனைவி கூறினாள். ஒவ்வொரு டசின் முட்டைகள் சேரும் போது அவற்றை விற்று விடுகின்றேன். அதன் மூலம் சேர்த்த பணம் தான் இது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சில இல்லைகள்

உலகத்தில் ஒரு சில விடயங்கள் இல்லாமல் இருந்தால் எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும் என்று நினைக்கத் தோன்றும். ஜாதி,மதம்,பணம்,நோய், வறுமை போன்றவை. ஆனால் இங்கே சில இல்லைகள் உள்ளன. அவற்றை அறிந்துகொள்ளுங்கள்.


அல்பேனியா நாட்டில் மதங்கள் இல்லை.

நியூஸிலாந்து நாட்டில் காக்கைகள் இல்லை.

ஆப்கானிஸ்தானில் ரயில் போக்குவரத்து இல்லை.

நிலவில் வாயு மண்டலம் இல்லை.

பாம்புக்கு காது இல்லை.



முதலைக்கு நாக்கு இல்லை.

அயர்லாந்தில் கவிஞர்கள்,எழுத்தாளர்கள், ஓவியர்களுக்கு வரிகள் இல்லை.

அரேபியா நாட்டில் நதிகள் இல்லை.

மீனின் கண்ணில் இமை இல்லை.

இந்தியாவில் எரிமலைகள் இல்லை.

எந்தப் பறவைக்கும் வியர்வைச் சுரப்பி இல்லை.

ஈ,எறும்பு முதலிய பூச்சிகளுக்கு கேட்கும் திறன் இல்லை.

யானைகளுக்கு தூரப் பார்வை இல்லை.

குளிர் காலத்தில் குயில் கூவுவது இல்லை.

பூனைக்கு இனிப்புச் சுவையை கண்டறியும் ஆற்றல் இல்லை.




## தெரிந்துகொள்ளுங்கள்

★ கடல் உயிரியான ஆக்டோபஸின் இரத்தம் நீல நிறமாக இருக்கும்.

★ பறவை இனத்தில் சிட்டுகள் 12 நாட்களில் அடைகாத்து குஞ்சு பொரித்து விடும்.

★ அட்லாண்டிக் பெருங்கடலில் ஆற்று நீர் அதிகமாக கலக்கிறது.

★ இலைகள் உதிர்க்காத மரம் ஊசி இலை மரம்.

★ அயோடின் குறைவால் ஏற்படும் நோய் முன் கழுத்து கழலை நோய்.

★ உடலில் இரத்தம் பற்றாக்குறை உள்ளவர்கள் சாப்பிடக் கூடிய பழம் பேரீச்சம் பழம்.

★ நில அதிர்வுகளை மற்றும் நிலநடுக்கத்தை அளக்க சீஸ்மோகிராஃப் என்ற கருவி பயன்படுத்தப்படுகின்றது. சார்லஸ் ரிக்டர் என்ற அமெரிக்கர் நிலநடுக்கத்தை அதன் ஆற்றல் அடிப்படையில் கணக்கிட கணித முறையை உருவாக்கினார்.

அதுவே ரிக்டர் அளவுகோல் எனப்படுகிறது. இந்த முறையில் நிலநடுக்கம் எந்த அளவுக்கு என்பது எண்கள் வடிவில் அளக்கப்படுகிறது.

## குறுக்கெழுத்துப்போட்டி - 04

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ | 5 |
| 6 | 7 | 8 | ■ | 9 | 10 |
| ■ | 11 | 12 | 13 | ■ | ■ |
| 14 | ■ | 15 | 16 | ■ | 17 |
| 18 | ■ | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | ■ | ■ | 25 | 26 |

**இடமிருந்து வலம்**

1.சூரியன் என்றும் சொல்லலாம்

6. பனி

9. வரட்சியான காலப்பகுதி

11. அர்ஜுன் நாயகனாக நடித்த படம் (குழம்பியுள்ளது)

15. உறவு முறையொன்று

19. பெண்களின் அழகான நடையை இதற்கு ஒப்பிடுவர் (குழம்பியுள்ளது)

23. இது வந்தால் பத்தும் பறந்துபோகும்

25. சூரியன் உதிக்கும் காலம் (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. இது மெதுவாக செல்லும்

2. அடி

3. மான்களில் ஒரு வகை (குழம்பியுள்ளது)

5. மணம் என்றும் கூறுவர்

13. இதில் 12 உள்ளது (குழம்பியுள்ளது)

14. இது என்றால் பிணமும் வாயைத் திறக்கும் என்பர் (தலைகீழ்)

17. பாட்டு (தலைகீழ்)

21. இது ஓய்வதில்லை

### குறுக்கெழுத்துப்போட்டி - 02 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. மரணம் | 1. மரை |
| 6. நரை | 2. நரகம் |
| 8. மீனம் | 4. வனம் |
| 11. கவலை | 5. மீன் |
| 14. அகம் | 12. அபலை |
| 17. வேலை | 14. கல்வி |
| 20. பங்கம் | 17. வேங்கை |
| 24. விலை | 18. கலை |
| 26. நாகை | 21. நாம் |

250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

**வே.குமாரசுவாமி**
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

**பாராட்டுப்பெறுவோர்**

01. சிவபாலன் உஷாருதன்
நவாலி தெற்கு, மானிப்பாய்.

02. திருமதி ஏ.சர்மிளா
இல. 620, நாவலர் வீதி
அரியாலை.

03. எஸ்.மாதுரன்
பிரம்படி லேன்
கொக்குவில்.

04. க.ஞானமுத்து
கைதடி மேற்கு, கைதடி.

05. வி.செல்வநாயகம்
சிவன் கோவில் வீதி
புத்தூர்.

*உங்கள் விடைகளை*
*'Saturday மெயில்'*
இல. 336, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
*என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...*

## விடுகதைகள்

★ கண்ணில்லாத நான் குருடருக்கு வழிகாட்டுகிறேன் நான் யார்?

★ கத்தி போல இலை இருக்கும் கவரிமான் போல பூ பூக்கும் அது என்ன?

★ கந்தல் துணியைக் கட்டிக் கொண்டு முத்துப்பிள்ளைகள் பெற்று மகிழ்ந்தாள் அவள் யார்?

★ கரியன் வந்தால் விரைந்தழைப்பார். கதிரவன் வந்தால் விரைந்தோட்டுவார் அது என்ன?

★ கறுத்த பாறைக்கு வெளுத்த நல்ல வேராம் அது என்ன?

★ கடிவாளம் போட்டால் காலிலே கிடக்கும் அது என்ன?

★ கண்ணால் பார்க்கலாம் கையால் பிடிக்க முடியாது அது என்ன?

★ கண்ணுக்குத் தெரியாதவன் கண்ணை மறைப்பான் அவன் யார்?

★ கல்லால் ஆன குதிரைக்கு மரத்தாலே மூக்கணாங் கயிறு அது என்ன?

★ கறுப்புச் சட்டை அணிந்தவன் கபடம் அதிகம் உள்ளவன் கூவி அழைத்தால் வந்து விடுவான். தன் கூட்டம் அனைத்தும் சேர்ந்திடுவான் அவன் யார்?

விடைகள்.

01. ஊன்றுகோல்
02. கரும்பு
03. சோளக்கதிர்
04. விளக்கு
05. யானைத்தந்தம்
06. செருப்பு
07. நிழல்
08. கண் இமை
09. திருகை
10. காகம்

ஞா.பிரகாஸ்,
வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நச்சினார்க்கினியரின் உவமைத்திறன்

வளவ. துரையன்

தொல்காப்பியத்துக்கு உரை எழுதிய பெருமக்களில் நச்சினார்க்கினியர் குறிப்பிடத்தக்கவர். இவர் தொல்காப்பிய நூலில் உள்ள எழுத்ததிகாரம், பொருளதிகாரம் இரண்டுக்குமே உரை எழுதியுள்ளார்.

பொருளதிகாரத்தில் அகத்திணையியல், புறத்திணையியல்,களவியல்,கற்பியல்,பொருளியல் ,செய்யுளியல் எனும் ஆறு இயல்களும் எழுதப்பட்டுள்ளன.நச்சினார்க்கினியரின் உரையானது இளம்பூரணர் உரைக்கும் பேராசிரியர் உரைக்கும் காலத்தால் பிற்பட்டதாகக் கருதப்படுகிறது.

புலவர்கள் தாங்கள் கூறவந்த கருத்துகளைத் தெளிவாக விளக்குவதற்கு உவமைகளைக் கையாள்வது தொன்றுதொட்டு வரும் மரபாகும். பொருளதிகாரத்தில் நச்சினார்க்கினியர் பயன்படுத்தியுள்ள சில உவமைகள் இந்த உரையாசிரியரின் கற்பனை நயத்துக்கும் இவரது எழுத்து ஆளுமைக்கும் உவமையாக இருக்கிறது.

நச்சினார்க்கினியர் பொருளதிகாரத்திற்கு அப்பெயர் ஏன் வந்தது என்பதை பின்வருமாறு விளக்குகிறார். அப்போது 'நாண்மீனின் பெயர்' நாளிற்குப் பெயராகினாற் என்ற உவமையைக் காட்டுகிறார்.

கார்த்திகை என்பது ஒரு நாள்மீனின் பெயராகும். கார்த்திகை மீனின் ஆட்சிக்குரிய நாளுக்கு கார்த்திகை எனும் பெயரே ஆகி வந்து ஆகுபெயராக நிற்கிறது. அதுபோல் பொருள் எனும் பெயரானது அப்பொருளின் இலக்கணத்தை உணர்த்தும் அதிகாரத்திற்குப் பெயராக வந்துள்ளது என்பது நச்சினார்க்கினியர் கூறும் விளக்கம்.

கலித்தொகையில் **'கொடிமிசை மையறு மண்டிலம்'** எனும் தொடர் காணப்படுகிறது.இத்தொடரில் கொடி என்பதற்குக் கீழ்த்திசை என்பது பொருளாகும்.

**''கொடிநிலை கந்தழி வள்ளி என்ற**
**வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்**
**றும்**
**கடவுள் வாழ்த்தொடு கண்ணிய**
**வருமே''**

என்ற நூற்பாவின் பொருளைக்கூற வரும் நச்சினார்க்கினியர் கலித்தொடரின் தொடரை உவமையாக்குகிறார். **'கொடிமிசை மையறு மண்டிலம்'** என்றாற்போல என்பது அவர் காட்டும் உவமையாகும்.

அதாவது கலித்தொகையில் கொடி எனும் சொல் கீழ்த்திசை எனும் பொருள் தருவதுபோல இந்நூற்பாவிலும் கொடி என்பதற்குக் கீழ்த்திசை என்று பொருள் கொள்ளவேண்டும். அப்போது கொடிநிலை என்பது கீழ்த்திசைக்கண்ணே நிலைபெற்றுத் தோன்றும் சூரியன் எனும் பொருளைத்தரும் என்பது இதன் விளக்கம்.

அடுத்து உள்ளங்கை, புறங்கை எனும் இரண்டையும் உவமையாக நச்சினார்க்கினியர் பயன்படுத்துவதைக் காணமுடிகிறது. உள்ளங்கை இரண்டு உடையவர்க்குப் புறங்கையும் இரண்டாகத்தாம் இருக்கும். நான்கு இருக்கமுடியாது.

குறிஞ்சி, முல்லை ,மருதம்,நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை எனப்படும் ஏழும் அகத்திணையில் வருகின்றன.பன்னிரு படலத்தாரும் வெண்பாமாலை ஆசிரியரும் புறத்திணை பன்னிரண்டு என வகுத்துள்ளனர். ஆனால், நச்சினார்க்கினியரோ அங்கை இரண்டுடையார்க்குப் புறங்கை நான்காவது இரண்டாயவாறு போல எனும் உவமையைக் கூறி அகத்திணை ஏழுவகை என்றால் புறத்திணையும் ஏழுவகையாகத்தான் இருக்கமுடியும். பன்னிரண்டாக இருக்கமுடியாது என்று விளக்குகிறார்.

பொதுவாக ஒருவரை பிறரோடு ஒப்பிட்டுப் பார்த்து அவர்களில் யார் உயர்ந்தவர் என்பது உலக வழக்காகும்.ஆனால், அறிவர் தாபதர் முதலியவர்களைப் பிறரோடு ஒப்பிட்டுப் பாராமலேயே அவர்தம் உயர்வை எண்ணி மேம்பட்டவர் என்று வாகைத்திணையில் காட்டப்படுகிறது.

இதற்கு உவமை கூறவந்த நச்சினார்க்கினியர் ஒன்றனோடு

ஒப்பு ஒரீ

இக்

கா

இலக்கிய சுவை...

ணாது

மாணிக்கத்

தினை நன்றென்றாற் போல எனக்காட்டுகிறார். உலகில் மாணிக்கத்தை வேறு பொருளுடன் ஒப்பிட்டுப் பாராமலேயே அதன் உயர்ச்சி கருதி பாராட்டுகின்றனர். அதுபோல அறிவர் முதலானவர்களையும் உயர்வாகக் கருதுவர் என்பது இதனால் விளக்கப்படுகிறது.

ஒன்றே வேறே எனும் நூற்பாவில் உயர்ந்த பால் என்பது உயர்தற்குக் காரணமாகிய பால் எனப்பொருள் விரியும். இதை விளக்க நச்சினார்க்கினியர் நோய் தீர்ந்த மருந்து என்ற உவமையைக் கையாள்கிறார்.நோய் தீர்ந்து மருந்து என்பது நோய் தீர்வதற்குக் காரணமாகிய மருந்து என்று பொருள் விரியும். எனவே, இவ்வுவமை மிகவும் பொருத்தமானதாகும்.

**''மிக்கோனாயினும் கடிவரையின்றே''** எனும் நூற்பாவில் மிகுதல் என்பது இரட்டித்தல் எனும் பொருளைத் தருகிறது.இதை விளக்க வல்லெழுத்து மிகுதல் என்றாற்போல் என்று நச்சினார்க்கினியர் உவமை கூறுகிறார்.புணர்ச்சி இலக்கணத்தில் வல்லெழுத்து மிக்கது என்றால் அங்குள்ள ஒரு வல்லொற்று

இரட்டித்தலைக் குறிக்கும் அதுபோலவே இந்நூற்பாவிலும் பொருள்காண வேண்டும் என்று உவமை காட்டுகிறது.

இதுபோல தொல்காப்பியப் பொருளதிகார உரையில் தான் கூற வந்த விளக்கத்துக்கு அரண் சேர்த்துப் பெருமை சேர்க்கப் பல உவமைகளை நச்சினார்க்கினியர் கையாண்டுள்ள உவமைத்திறன் படித்து இன்புறத்தக்கது.

# புதுக்கவிதை ஒரு சொல்– ஓயாத விவாதம்!

மா.ஆறுமுககண்ணன்

'புதுக்கவிதை' - இச் சொல் சரிதானா என்றொரு விவாதம் அவ்வகைக் கவிதைகள் தோன்றத் தொடங்கிய காலந்தொட்டே இருந்துவருகிறது.

மரபுக் கவிதைகளை பழைய கவிதைகள் என ஒரு சாரார் அழைத்ததன் விளைவுதான் சந்தங்கள் இன்றி எழுதப்பட்ட கவிதைகள் 'புதுக்கவிதைகள்' என அழைக்கப்படலாயிற்றோ என எண்ணத் தோன்றுகிறது. புதுமையுடன் படைக்கப்படும் கவிதைகள் அனைத்துமே புதுக் கவிதைகள் தான். வடிவத்தைப் பொறுத்த அளவில் குறுந்தொகையின் ஒவ்வொரு பாடலும் இப்போது புதுக்கவிதைகள் என அழைக்கப்படும் கவிதைகளுக்கு நிகராகவே உள்ளன. ஆனால், சுண்டக் காய்ச்சிய பாலைப்போல, இரத்தினச் சுருக்கமாய் சொற்களைக் கையாண்டு புதுப்புது கற்பனைகளும் உவமைகளும் இழையோடும் விதமாக இயற்றப்பட்ட குறுந்தொகைப் பாக்களை புதுக்கவிதை என்ற பிரிவில் பட்டியலிடுவதை நம்மால் ஏற்க இயலாது. காரணம், புதுக்கவிதை என்றால், அது நீள சொற்றொடரை இஷ்டம் போல ஒடித்து, சொற்கள் ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதப்பட்டிருக்க வேண்டும் என்ற பிம்பமே நம் நினைவுக்கு வரும்.

இன்றைக்குப் புதுக்கவிதைகள் என, பெயரளவில் அழைக்கப்படும் கவிதைகளில் பெரும்பான்மையானவை விடுகதைப் பாணியில் எழுதப்பட்ட நகைச்சுவைத் துணுக்குகளாகவும் ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட பழைய உவமைகளின் தொகுப்புகளாகவுமே அமைந்துள்ளன. மேலும், அவை சுருங்கச் சொல்லி வாசகனை சிந்தித்துப் பார்த்து சிலாகிக்க வைக்கும் திறன் அற்றவையாகவும் உள்ளன. தற்போது இராமாயணமும் மகாபாரதமும் கூட சந்தமில்லா கவிதை வடிவில் (வ-சன கவிதை) எழுதப்பட்டு எளிமையாக்கப்பட்டுவிட்டன. இது பாட்டில்களில் அடைத்து விற்கப்படும் தேனை மடமடவெனக் குடிப்பதுபோலத்தான்.

அவற்றின் தமிழ் மூல நூலை நாமே வாசித்து, புரிந்து கொண்டு, ஆராய்ந்து பார்ப்பது தனிச்சுவை. அதற்கு ஈடு இணையில்லை. இது நாமே வளர்க்கும் மலர்த் தோட்டத்தில் தேன் கூடு அமைத்து அதிலிருந்து கிடைக்கும் அடைகளைப் பிழிந்து சொட்டுத் தேனைச் சுவைப்பது போல. இரண்டுமே தேன் தான். எனினும் இரண்டுக்கும் தனித்தனிச் சுவை உண்டல்லவா? மரபுக் கவிதை என அழைக்கப்படும் சந்தக் கவிதைகளுக்கு முறையான இலக்கணம் தெரிந்திருக்க வேண்டும். இசைப்பாடல்களையும் சந்தக் கவிதையாகக் கொள்ளலாம். ஆனால், புதுக்கவிதைகளுக்கோ இது போன்ற எதுவும் தெரிந்திருக்கத் தேவையில்லை. நினைத்ததை நினைத்தபடி எழுதினால் போதும் என்றாகிவிட்டதால், புதுக்கவிதைகள் தற்போது புற்றீசல்கள் போல படையெடுத்து வருகின்றன. என்றாலும், அவற்றிலும் புதிய உவமை, புதிய சிந்தனைகள், புதிய சொற்சேர்க்கைகளுடன் காலத்தை வென்று நிற்கும் கவிதைகளும் இருக்கின்றன.

'சொல் புதிது, பொருள் புதிது' என்றார் பாரதியார். அதன்படி பார்த்தால் புதிதாக, புதுமையாகச் சொல்லப்படும் கவிதைகள் அனைத்தும் புதுக்கவிதைகள் தான். நமது வசதிக்கு ஏற்ப வேண்டுமானால் சந்தக் கவிதை, சந்தமில்லாக் கவிதை எனப் பிரித்துக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அதிர வைக்கும் திரைப்படம்

**2012** ஆம் ஆண்டில் உலகம் அழியப் போகிறது என்று வைத்துக் கொள்வோம்... சும்மா ஒரு பேச்சுக்குத்தான்... கற்பனை செய்ய முடிகிறதா அந்தப் பேரழிவை?

பொலிவூட்டில் அப்படி ஒருவர் கற்பனை செய்ததால் உருவாகியுள்ள படம் தான் 2012.

சுமார் 6 இலட்சம் வருடங்களுக்கு முன் மாயன் நாகரிகத்தைச் சேர்ந்த மக்கள் (இன்றைய கவுதிமாலா நாடுதான் முன்பு மாயன் நாகரிக மக்கள் வாழ்ந்த இடம். இன்னும் அந்த சின்னங்கள் உள்ளன.) உலகின் ஆயுள் என்னவென்று கணித்துள்ளார்களாம்.

வரும் 2012 டிசம்பர் 21 ஆம் திகதி வரை உலகின் தட்பவெப்ப நிலை மாறுதல்களால் என்னென்ன பேரழிவுகள் வரும் என்று அவர்கள் கணித்துள்ளார்களாம் (Maayan long count calender). கடல்கோள்கள், தொடரும் பூகம்பங்கள், கொள்ளை நோய்கள் போன்றவையெல்லாம் இதன் ஒரு பகுதிதானாம். ஆனால், 2012 இற்குப் பிறகு? அது பற்றி எந்தக் குறிப்புகளும் மாயன் நாகரிக ஆதாரங்களில் இல்லையாம். ஆக 2012 ஐ பூமியின் ஆயுள் முடியும் நாள் என்று எடுத்துக் கொண்டால் என்ன என்று இயக்குநர் யோசித்ததன் விளைவு தான் இந்த 2012 திரைப்படம்.

உலகம் முழுவதும் ஒரே நாளில் பூகம்பமும், கடல்கோளும் ஏற்பட்டால் என்ன நிகழும்? என்ற கற்பனையின் அடிப்படையில் இந்தப் படம் உருவாக்கப்பட்டு இருக்கிறது. பெரிய பெரிய நகரங்கள் அத்தனையும் இடிந்து தரைமட்டம் ஆவது போலவும், உலகிலேயே உயரமான இமயமலையையே கடல்கோள் விழுங்குவது போலவும் காட்சிகள் படமாக்கப்பட்டுள்ளன.

இந்த திகிலுக்கு மத்தியில், ஒரு குடும்பம் விமானத்தில் தப்பி செல்கிறது. உலகம் அழிந்தபின், அவர்கள் நிலை என்ன? என்பதாகப் போகிறது கதை.

'இன்டிபெண்டன்ஸ் டே', 'டே ஆஃப்டர் டுமாரோ' ஆகிய சூப்பர் ஹிட் படங்களை இயக்கிய ரோலண்ட் எம்மெரிச், இந்த படத்தை உருவாக்கியுள்ளார்.

அமந்தா பீட், டேனி குளோவர், தண்டி நியூடோன், ஆலிவர் ப்லாட் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். வரும் நவம்பர் 13 ஆம் திகதி உலகம் முழுவதும் இப்படம் திரைக்கு வருகிறது.



உலக சினிமா சரித்திரம் பார்த்திராத கிராபிக்ஸ் அற்புதம் எனும் வகையில் உலகம் அழியும் காட்சியைப் படமாக்கியிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாக்ஷி ரகசிய திருமணம்



வேதம், மானஸ்தன், மாப்பிள்ளை கவுண்டர் உள்ளிட்ட படங்களில் நடித்த நடிகை சாக்ஷி அமெரிக்க தொழிலதிபரை திருமணம் செய்து கொண்டார். மும்பையைச் சேர்ந்த சாக்ஷி தமிழ் மற்றும் தெலுங்கு படங்களில் நடித்துள்ளார். கடந்த 2 ஆண்டுகளுக்கும் மேலாக சினிமா வாய்ப்புகளை மறுத்து வந்த அவருக்கும், அமெரிக்க தொழிலதிபர் பிரம்மா பட் என்பவருக்கும் காதல் ஏற்பட்டது. இவர்களது காதலுக்கு இரு வீட்டாரும் எதிர்ப்புத் தெரிவித்து வந்துள்ளனர். இந்நிலையில் சாக்ஷி தனது அமெரிக்க காதலரை ரகசியமாகத் திருமணம் செய்து விட்டதாக செய்திகள் கசிந்துள்ளன. திருமணத்துக்குப் பின்னர் இருவரும் அமெரிக்கா சென்று விட்டதாகவும் அந்த செய்தி கூறுகிறது.

# சுருக்கமான தலைப்பு

மன்சூரலிகான் படத்துக்கு வைத்த 'ராஜாதிராஜா ராஜகுல திலக...' என்ற தலைப்பு மிக நீளமானதாகச் சொல்லப்பட்டது. பிறகு சில படங்களுக்கு ஒரு எழுத்தில் தலைப்பு வைத்தனர். இப்போது உருவாகும் இரு படங்களுக்கான தலைப்பு நீளமாக இருக்கிறது. உச்சரிக்கக் கஷ்டம் என்பதால், சுருக்கி விட்டனர். ஜி.கிருஷ்ணன் எழுதி இயக்கும் படம் 'விகடகவி'. விரிவு 'வினோத், கவிதா, டயானா, கருணா, விருமாண்டி'. இவர்களின் முதல் எழுத்தே 'விகடகவி'. தலைப்பில் அடுத்து 'ஊலலைா'. ஏ.எம்.ஜோதிகிருஷ்ணா இயக்கி ஹீரோவாக அறிமுகமாகும் இப்படத்தின் விரிவு 'ஊர்வசி, லைதா, லலிதா, லாவண்யா'.



தில்லாலங்கடி
ஜெயம் ரவி, தமன்னா



வேட்டைக்காரன்
விஜய், அனுஷ்கா

# குத்துப்பாட்டுக்கு ஆடிய ப்ரீத்தி

முன்னணி நடிகைகள் ஒத்தப்பாட்டுக்குக் குத்தாட்டம் போடுவதும், அதற்காகப் பெரும் தொகையை சம்பளமாகப் பெறுவதும் வாடிக்கையாகிவிட்டது. அந்த வரிசையில் இப்போது இணைந்திருப்பவர் பொலிவூட்டின் கன்னக் குழியழகி ப்ரீத்தி ஜிந்தா. இவர் அப்படி நடனம் ஆடியிருக்கும் படம் சல்மான்கானின் சொந்தத் தயாரிப்பான மேன் அவுட் மிஸஸ் கான். இந்தப் படத்தை இயக்கியிருப்பவர் பிரேம் சோனி. இதுபற்றி ப்ரீத்தி கூறுகையில்;

அப்படத்தில் எனக்கு ஒரு பாடலும் சில காட்சிகளும் உள்ள சிறிய கதாபாத்திரம். இதில் என் நண்பர் பிரேம் சோனிக்காகத்தான் நடிக்க ஒப்புக்கொண்டேன்' என்றார். நண்பருக்காக நடிக்க ஒப்புக்கொண்டாலும் பெரிய ஒரு தொகையை சம்பளமாகப் பெற்றிருக்கிறாராம் ப்ரீத்தி!

# ஒருவர் நடிக்கும் படம்

வசனமே இல்லாத படம், பாடல்களே இல்லாத படங்கள் நாயகருடன் நாயகி மட்டுமே நடித்த படம் என புதுமைப் படைப்புகள் பல தமிழில் வெளியாகியுள்ளன. இப்போது ஒருவர் மட்டுமே நடிகையாக நடிக்கும் படம் உருவாக உள்ளது. 'ராஜாதிராஜா' விற்குப் பிறகு நல்ல வாய்ப்புக்குக் காத்திருந்த மும்தாஜ், ஒரே ஒரு வேடம் மட்டுமே நடிக்கும் புதுமையான படத்தின் கதையைக் கேட்டுள்ளார். இறுதிப் பேச்சுவார்த்தை முடியாததால் வெளியே தகவல் சொல்லவில்லையாம்.

# ஆர்யாவின் 'பாஸ்'

நடிகர் ஆர்யா நடிக்கும் படத்துக்கு பாஸ் என்கிற பாஸ்கரன் என்று பெயரிடப்பட்டுள்ளது. நான் கடவுள் படத்தைத் தயாரித்த வாசன் விஷுவல் வெஞ்சர் நிறுவனம் தயாரிக்கும் புதிய படம் பாஸ் என்கிற பாஸ்கரன். இப்படத்தின் நாயகனாக நடிகர் ஆர்யா நடிக்கிறார். அவரது ஜோடியாக நடிகை நயன்தாரா நடிக்கிறார். சிவா மனசுல சக்தி படத்தை இயக்கிய ராஜேஷ்தான் பாஸ் படத்தையும் இயக்குகிறார். யுவன்சங்கர்ராஜா இசையமைக்கிறார். சக்தி சரவணன் ஒளிப்பதிவு செய்கிறார். விரைவில் படப்பிடிப்பு தொடங்கவுள்ளது.

# சனாகான் மறுப்பு

சிலம்பாட்டம்' படத்துக்குப் பிறகு பரத் ஜோடியாக 'தம்பிக்கு இந்த ஊரு' படத்தில் நடித்து வரும் சனாகான், அடுத்து இரு புதுப்படங்களுக்கு கால்ஷீட் கொடுத்தார். இதில் நந்தகுமார் எழுதி இயக்கும் 'சாந்துப்பொட்டு' படத்தில், சிபி ஜோடியாக நடிக்கிறார். இப்படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பு முடிந்துள்ளது. தவிர, எஸ்.பி.ஹோசிமின் எழுதி இயக்கும் 'ஆயிரம் விளக்கு' படத்தில் சாந்தனு ஜோடியாக ஒப்பந்தமாகி உள்ளார் சனா. மூன்று படங்களில் நாயகியாக நடிக்கும் அவர் கால்ஷீட் இல்லாததால் தெலுங்கு வாய்ப்புகளை மறுத்துவிட்டாராம்.

# புலி வந்தது எப்படி?

'பேராண்மை' பட வெற்றியின் மகிழ்ச்சி ரைடக்டர் எஸ்.பி.ஜனநாதன் முகத்தில் பிரதிபலித்தது. படத்தில் வரும் புலிக் காட்சி பற்றி கேட்டபோது, 'புலிகளை நேரடியாகப் படம் பிடிக்கக்கூடாது என்ற விதி இருக்கிறது. இக்காட்சி ஒரு கிளிப்பிங்ஸிலிருந்து எடுத்து சேர்க்கப்பட்டது. புலியைக் கொன்று ரவி இழுத்து வருவது போல் அமைக்கப்பட்ட காட்சியில் தோன்றுவது செயற்கைப் புலியாம்.



ப்ரீத்தி ஜிந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவ்வார மெயிலில் இவர்...

# ராஜ் இராஜரெட்ணம்

கடந்த சில வாரங்களுக்கு முன்னால் இரசாயனவியலுக்கான நோபல் பரிசினைப் பெற்றதன் மூலம் இந்தியாவைச் சேர்ந்த தமிழர் ஒருவர் பிரபலமாகியிருந்த நிலையில் சட்டவிரோதமான நிதி நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் கூறி கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டதன் மூலம் இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட தமிழரான கோடீஸ்வரர் ராஜ் இராஜரெட்ணம் சர்வதேச அளவில் பிரபலமாகியுள்ளார்.

கடந்த வாரம் ராஜ் இராஜரெட்ணம் கைது செய்யப்பட்டது முதல் அவர் மீதான நோக்கு சர்வதேச அளவில் குறையவில்லை.

சர்வதேசத்தின் மிகப் பிரபலமான ஊடகங்களிலும் அமெரிக்கா, இலங்கை ஆகிய நாடுகளின் ஊடகங்களில் ராஜ் இராஜரட்ணத்தின் கைது தொடர்பான செய்தி தலைப்புச் செய்தியாக வெளியானது.

அரசுகளின் ஏனைய நடவடிக்கைகளைத் தீர்மானிக்கும் முக்கிய அம்சமாக நிதிநிலைவரம் உள்ளது. அந்த வகையில் நிதிசார் நிறுவனங்களில் தாக்கம் ஏற்படும்போது சகலருமே அது குறித்து மிக அக்கறையான பார்வையைக் கொண்டிருப்பர்.

சர்வதேச பங்குச்சந்தைகளில் ராஜ் இராஜரெட்ணத்தின் கைதைத் தொடர்ந்து பாரிய வீழ்ச்சி காணப்பட்டது. அவரது பிறந்த மண்ணான இலங்கையிலும் அதன் தாக்கத்தை உணரக் கூடியதாக இருந்தது.

இலங்கை பங்குப் பரிவர்த்தனை ஆணைக்குழு ராஜ் இராஜரெட்ணத்தின் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் மாத்திரமே இலங்கையிலுள்ள அவரது சொத்துகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமெனக் கூறியிருந்தது.

1.3 பில்லியன் அமெரிக்க டொலர் சொத்துக்கு சொந்தக்காரரான ராஜ் இராஜரெட்ணம் கலிலியன் குழுமத்தினை நிர்வகித்து வருகின்றார்.

இவரது சொத்து மதிப்பீட்டின் படி இவர் உலகத்தின் 559 ஆவது கோடீஸ்வரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளதாக போப் சஞ்சிகை கூறுகின்றது.

இக்கோடீஸ்வரர் இலங்கையின் கொழும்பில் 1957 ஜூன் 15 இல் பிறந்தார். கொள்ளுப்பிட்டி சென்.தோமஸ் ஆரம்பப் பாடசாலையில் தனது பாடசாலைக் கல்வியை ஆரம்பித்து பின்னர் லண்டனிலுள்ள பாடசாலை ஒன்றில் நிறைவேற்றினார்.

தொடர்ந்து பிரிட்டனின் சஸ்ஸெக்ஸ் பல்கலைக்கழகத்தின் பொறியியல் துறையில் பட்டப்படிப்பினை (Bsc) முடித்து அமெரிக்காவின் பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தில் 1983இல் M.B.A. பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து ஆஷா பப்லா என்பவருடன் திருமண பந்தத்தில் இணைந்த ராஜ் இராஜரெட்ணத்திற்கு மூன்று பிள்ளைகள் உண்டு.

சாஸ் மன்ஹற்றன் வங்கியில் கடன் வழங்கும் அதிகாரியாகத் தனது பணியை ஆரம்பித்த இவர் தனது அனுபவங்களைக் கொண்டு 1992 இல் கலிலியன் குழுமத்தை ஆரம்பித்தார்.

தொடர்ந்து தனது வியாபார அபிவிருத்தியின் பயனாக 2008 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் 262 ஆவது பணக்காரனாக வரிசைப்படுத்தப்பட்டார்.

அத்துடன், 2009 ஆம் ஆண்டின் முற்பகுதியில் உலகிலுள்ள இலங்கையர்களில் முதற் கோடீஸ்வரராகவும் வரிசைப்படுத்தப்பட்டார்.

கடந்த ஐந்து வருடங்களில் மாத்திரம் 20 மில்லியன் அமெரிக்க டொலரினைத் தானமாக வழங்கிய ராஜ் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் பிரசாரத்திற்கு 87 ஆயிரம் அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்கியுள்ளார்.

இதேவேளை, இலங்கையின் மோதல்களால் பாதிக்கப்பட்ட வடபகுதிகளின் அபிவிருத்திக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் வழங்குவதற்கும் உறுதியளித்திருந்தார். அத்துடன், அப்பகுதிகளில் கண்ணிவெடி அகற்றுவதற்கும் ஒரு தொகைப் பணத்தை ஒதுக்கியிருந்தார்.

மேலும், கடல்கோளினால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கும் உதவி வழங்கிய இவர் இந்திய துணைக்கண்டத்திலும் பல அபிவிருத்தித் திட்டங்களுக்கும் உதவி வழங்கியிருந்தார்.

இலங்கையின் வட பகுதி மோதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்க தான் இலகுவில் தீர்மானிப்பதற்கு கிளிநொச்சியைச் சேர்ந்த சிறுவனை இரு கால்களும் அற்ற நிலையில் பார்த்தமையே காரணமென ராஜ் இராஜரெட்ணம் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவால் தடை செய்யப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு 3.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி இராஜரெட்ணத்தால் வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.


இவ்வாறாக உலகின் 559 ஆவது கோடீஸ்வரராக இருந்து பல உதவிகளையும் தானங்களையும் வழங்கியிருந்த ராஜ் இராஜரெட்ணம் சட்டவிரோத நிதி நடவடிக்கையின் பேரில் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.


இவரின் குற்றச்சாட்டு தொடர்பாக அமெரிக்கா தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.


ஆனால், ஒரு இலங்கைத் தமிழன் உலகின் 559 ஆவது கோடீஸ்வரனாகவும் இலங்கையில் முதலாவதாகவும் இருந்துள்ளமை பலருக்கு ஏக்கத்தை அளித்துள்ளது.

யோ.நிமல்ராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழங்கள் பழுப்பதும் பூக்கள் உதிர்வதும் ஏன்?

வாயுநிலையில் உள்ள தாவர ஊக்கியான எத்திலீன் பழங்களை பழுக்கச் செய்கிறது. பூக்களை உதிரச் செய்கிறது. பழங்கள் மற்றும் பூக்களின் வாழும் காலத்தை விரைவுபடுத்தும் இந்த எத்திலீன் வாயு தாவரசெல்களில் அதற்கான தூண்டுதல்களை ஏற்படுத்துகிறது.


தாவரங்களின் வாழ்க்கைப் பயணம் முழுவதும் எத்திலீன் வாயு உடன்செல்கிறது. தாவரநாற்றுகளின் ஒளிநாட்டம், புவிநாட்டம், வேர்நாட்டம் பண்புகளுக்கு எத்திலீன் காரணமாக இருக்கிறது. விதை முளைத்தலைத் தூண்டுகிறது. தடைகளைத் தாண்டி தாவரத்தை வளரச்செய்கிறது. வேர்களின் வளர்ச்சியை ஒழுங்குபடுத்துகின்றது. குறிப்பாக வேர்த்தூவிகளை வளரச் செய்கிறது. நைட்ரஜனை வேர் முண்டுகளில் நிலைப்படுத்தும் செயல்களில் துணைநிற்கிறது.

ஒரு பழக்கூடையில் ஓர் அழுகிய பழத்திலிருந்து வெளிப்படும் எத்திலீன் வாயு அருகில் உள்ள பழங்கள் அழுகுவதை விரைவுபடுத்துகிறது. இதனால்தான் பழங்களையும் பூக்களையும் விற்பவர்கள் அன்றாடம் தரம் பிரித்து அழுகிப்போனவற்றை அகற்றிவிடுகின்றனர். அதேசமயம் நோய்க்கிருமிகளையும் பாதகமான சுற்றுச் சூழலையும் தாங்கிநிற்கும் வலிமையையும் இந்த எத்திலீன் வாயு தான் தாவரத்திற்கு அளிக்கிறது. அதிகப்படியான எத்திலீன் உற்பத்தி





## விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்



விளைபொருட்களில் நாசத்தை ஏற்படுத்துவதால் எத்திலீன் உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் ஆய்வுகளை விஞ்ஞானிகள் மேற்கொள்கின்றனர்.

தாவரங்களில் காணப்படும் ENI என்ற புரதம் எத்திலீனின் முயற்சிகளை முறியடிக்கவல்லது என்று ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. அழுகுதல் மற்றும் உதிர்தல் காரணமாக ஏற்படும் பயிர் இழப்பைக் குறைப்பதற்கு இந்த ஆய்வுகள் துணைசெய்கின்றன.

# 20 கோடி ஆண்டுகளுக்கு முன்பே கடலில் வாழ்ந்த உயிரினங்கள்

பூமியில் பிராண வாயு தோன்றுவதற்கு 200 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னரே கடல்களில் உயிரினங்கள் வாழ்ந்ததாக புதிய ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.

தற்போது நியூஜெர்ஸியில் உள்ள ரட்ஜர்ஸ் பல்கலைக்கழகத்தின் புதிய ஆய்வுக்குழு, பூமியில் சுவாசிப்பதற்கான வாயு இல்லாத காலகட்டத்திலும் தாவரம் போன்ற பற்றீரியாக்கள் இருந்ததாக கண்டுபிடித்துள்ளனர்.

தென்னாபிரிக்காவின் 2 அல்லது 3 பில்லியன் ஆண்டுகள் பழைமையான கடலடி பாறைகளின் மீதங்களை வைத்து நடத்திய ஆய்வில் இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நைட்ரஜன் சுழற்சியின் இரசாயன ஆதாரங்கள் இதனை நிரூபித்துள்ளதாக கூறும் இந்த ஆய்வு, பிராண வாயு இல்லாமல் இருந்திருந்தால் இது நடக்க வாய்ப்பேயில்லை என்று கூறியுள்ளது.

வாழும் உயிரிகள் நைட்ரஜன் சுழற்சியைப் பெற்று மேலும் சிக்கலான இயற்கை மூலக்கூறுகளை உற்பத்தி செய்துள்ளது.

இந்த நைட்ரஜன் சுழற்சியின் இருப்பு பூமியில் பிராண வாயு தோன்றுவதற்கு முன்பே உயிரினங்கள் இருந்ததற்கான சுவடு என்று இந்த ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். ஒளி இயைபாக்க (Photo Synthesis) நடவடிக்கை மூலம் பிராண வாயுவை ஒரு துணைப் பொருளாக உற்பத்தி செய்த உயிரிகள் சுமார் 2.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் தான் தோன்றியுள்ளன என்று கூறும் இந்த ஆய்வாளர்கள், அதன் பிறகு 200 மில்லியன் ஆண்டுகளுக்குப் பிறகே வளி மண்டலத்தை பிராண வாயு செறிவூட்டியது என்று கூறியுள்ளனர்.

'நைட்ரஜன் ஒப்பு நோக்கி பார்க்கப்படும் போது, ஒரு அசையா மூக்கூறும் அதன் வளிமண்டல ஆயுள் ஒரு பில்லியன் ஆண்டுகள்' என்கிறது இந்த ஆய்வு.

மாறாக பிராண வாயு உற்பத்திக்கான ஒளி இயைபாக்கம் தொடர்ச்சியாக நடைபெறும் ஒரு நடவடிக்கையாகும். இருப்பினும் பூமியில் எப்போது பிராண வாயு ஒளி இயைபாக்கம் தொடங்கியது என்பது இன்னமும் புரியாத புதிராகவே உள்ளது என்று இந்த ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பூமியின் வரலாற்றில் 'ஒட்சிசன்' காலகட்டம் என்று அழைக்கப்படும் காலத்தில் விஷ வாயுக்களான மீதேன், அமோனியா மற்றும் பிற விஷ வாயுக்களே இருந்தன. இதனால் இந்தக் காலகட்டங்களில் உயிரினங்கள் இருந்திருக்க வாய்ப்பே இல்லை என்றுதான் இது நாள் வரையிலான ஆய்வுகள் தெரிவித்து வந்தன.

# சனிக்கிரகத்தை சுற்றி பாரிய வளையம்

சனிக்கிரகத்தைச் சுற்றியுள்ள இதுவரை ஒரு போதும் அவதானிக்கப்படாத மிகப் பெரிய வளையம் நாசாவின் 'ஸ்பிட்ஸர்' விண்வெளி தொலைக்காட்டி மூலம் கண்டறியப்பட்டுள்ளது.


சனிக்கிரகத்தின் பிரதான வளையத்திலிருந்து 27 பாகை பனிக்கட்டி மற்றும் துகள்களை உள்ளடக்கிய இந்த வளையம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 316 பாகை பரனைட் அளவான தாழ்ந்த வெப்பநிலையிலுள்ள இந்த வளையமானது வெப்பக் கதிர்ப்பில் பிரகாசிக்கக் கூடியதாகும்.

எனினும் இந்த வளையம் இதுவரை எவராலும் அவதானிக்கப்படாமல் இருந்ததாக நாசாவின் ஜெட் புரொப்பல்ஸன் ஆய்வுகூட பேச்சாளர் விட்னிகிளேவின் தெரிவித்துள்ளார்.

இந்த புதிய வளையமானது சனிக்கிரகத்திலிருந்து 3.7 மில்லியன் மைல் தொலைவில் 7.4 மில்லியன் மைல் தொலைவிற்கு விரிவுபட்டதாக காணப்படுகிறது.


இந்த வளையம் ஒரு பில்லியன் பூமிகளை உள்ளடக்கக் கூடிய அளவில் பாரியதாகும். மேற்படி வளையம் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பு சனிக்கிரகத்தைச் சுற்றி ஏ முதல் ஈ வரை பெயர் சூட்டப்பட்டுள்ள 7 பிரதான வளையங்களும் அநேக மங்கிய வளையங்களும் கண்டு பிடிக்கப்பட்டன.

'ஸ்பிட்ஸர்' விண்வெளி தொலைக் காட்டியை கொண்டுள்ள விண்கலமானது பூமியிலிருந்து 66 மில்லியன் தொலைவில் வலம் வருகின்றமை குறிப்பிடத்தக்கது ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2050 - 2100 இல் உலகம் இப்படி இருக்கும்



இன்றைய நவீன உலகில் உள்ள ஒவ்வொரு வசதியும் ஒரே நாள் இரவில் உருவானது அல்ல. பலநாள் பல ஆண்டு முயற்சியின் விளைவாகவே கிடைத்தவை. 'ஒரு சிறிய விளக்கு செய்யும் உதவியை ஒரு பெரிய சூரியனால் செய்ய முடியாது. இரவில் ஒளிதர அந்த விளக்கால் மட்டுமே முடியும் என்றார் பெர்னாட்ஷா.இன்று நாம் பயன்படுத்தும் விமானம்,ரயில், மொபைல் உள்ளிட்டவை பல்வேறு கண்டு பிடிப்புகளால் மேம்படுத்தப்பட்டவை.அவை உருவாக்கப்படும் போது இருந்த நிலைக்கும் தற்போது உள்ள நிலை முற்றிலும் மாறிவிட்டன. அதுபோல் எதிர்கால தேவைகளுக்காக இன்று ஏராளமான விஞ்ஞானிகள் உலகம் முழுவதும் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.2100 ஆம் ஆண்டுக்குள் இந்த உலகம் எப்படி இருக்கப் போகிறது என்பது உங்கள் கண்முன் இங்கே...

### வயதான உலகம்

*கடல் மட்டம் உயர்வதால் மும்பையில் கேட் வே ஆப் இந்தியா தண்ணீருக்குள் இருக்கும்.

* குற்றவாளிகளை துல்லியமாக அடையாளம் காணும் தொழில்நுட்பம் பொலிஸார் வசம் இருக்கும்.

*பொதுக்கூட்டங்களில் புழுதிவாரி இறைக்கும் நபர்களின் பேச்சுகளை பதிவு செய்யும்போது ஒழுங்கு ஆணையம் உருவாக்கப்படும். தவறாகப் பேசுவோர் மீது இந்த ஆணையம் தாமாக முன்வந்து வழக்குப் பதிவு செய்யும்.

* கடற்கரையோரங்களில் மணல் இருக்கிறதோ இல்லையோ கடல்நீர் சுத்திகரிப்பு ஆலைகள் இருக்கும்.

* மரபணு மாற்றம் செய்யப்பட்ட அழுகாத தக்காளி,கண்ணீர் வரவழைக்காத வெங்காயம், கெட்டுப்போகாத காய்கறிகள் சந்தைகளில் கிடைக்கும்.

*உலகம் முழுவதிலும் வயதானோர் அதிகம் இருப்பார்கள்.

* மனித மரபணுக்கள் மூலம் உருவாக்கப்பட்ட சூப்பர் மனித இனம் உருவாக்கப்படும்.இன்றைய நிலையில் இதற்கு ஈடு இணையான தலைமுறை இல்லை என்ற நிலை உருவாக்கப்படும்.

*உலக மக்கள் தொகை இன்னும் 70 ஆண்டுகளில் உச்சத்துக்குச் சென்று அங்கிருந்து கீழே சரியத்தொடங்கும். 2070 இல் 900 கோடி மக்கள் இருப்பார்கள். ஆனால், 2100 இல் 840 கோடி மக்களே இருப்பார்கள்.

* பருவநிலை மாற்றம் கடுமையாக இருக்கும் என்பதால் 2100 ஆம் ஆண்டு வாக்கில் பஞ்சம் நிலவும் உலகின் பாதிப் பேர் பட்டினியாக இருப்பார்கள்.

* 10 மாதம் சுமந்து பிள்ளை பெற்றுக் கொள்வதை விட டெஸ்ட் டியூப் பேபியாக பெற்றுக் கொள்ளலாம் என்று வெளிநாட்டுப் பெண்கள் நினைப்பார்கள்.

* வேலை பார்க்கும் இடமும் ,தங்கியிருக்கும் இடமும் ஒவ்வொருவருக்கும் நிர்ணயிக்கப்படும்.அங்கு மட்டுமே அவர்கள் இருக்கவேண்டும்.

*பொதுவாக ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு 'விர்ச்சுவல் ரியாலிட்டி' வழியாக செல்லலாம் என்பதால் போக்குவரத்தை பயன்படுத்தப்பட வேண்டிய அவசியம் குறையும்.

பூமிக்கு அருகில் சுற்றுலா கோள்

விண்வெளிக்குச் செல்ல ஆசைப்படுவோர், நிலவுக்கோ அல்லது வேறு கிரகத்துக்கோ சென்று வருவது கடினம் என்பதால் பூமியின் வளிமண்டலத்துக்குச் சற்று வெளியே விண்வெளியில் செயற்கையாக ஒருகோள் உருவாக்கப்படும்.அங்கு சுற்றுலாப்பயணிகளுக்குத் தேவையான தங்குமிடம், உணவு உள்ளிட்ட வசதிகள் இருக்கும். அங்கிருந்து பூமியின் அழகை சுற்றுலாப்பயணிகள் இரசிப்பார்கள்.இதுபோன்று சுற்றுலாக் கோள்களை உருவாக்க நாடுகளிடையே போட்டி இருக்கும்.

### எல்லா நாடுகளிலும் செல்லுபடியாகும் நாணயம்

ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்குச் செல்ல வேண்டுமானால், நாம் அந்த நாட்டு நாணயத்தை மாற்றிச் செல்ல வேண்டிய கட்டாயம் இருக்கிறது. எதிர்காலத்தில் எந்த நாட்டு பணத்தையும் எங்கும் செலவழித்துக் கொள்ளும் வகையில் வழிமுறைகள் உருவாக்கப்படும். தனிநபர்கள், நிறுவனங்கள் சொந்தமாகப் பணத்தை வெளியிடும் முறை உருவாகும்.

### கம்பியூட்டர் வைரஸ்களால் போர்

கம்பியூட்டர் வைரஸ்களால் இரு நிறுவனங்களுக்கு இடையில் பெரிய பிரச்சினை அல்லது இரு நாடுகளுக்கு இடையில் பெரிய சண்டை கூட வரலாம். கம்பியூட்டர்களால் மட்டுமே முழுமையாக இயங்கும் நிறுவனங்கள் உருவாகும். இது தொடர்பாக வழக்குகளே நீதிமன்றங்களில் குவியும். ஏறத்தாழ பாதி மனிதனுக்குச் சமமாக இயங்கும் கம்பியூட்டர் மென் பொருட்களால் போராட்டங்கள் உருவாகும்.

### இயற்கையிலிருந்து மின்சாரம்

எதிர்காலத்தில் மின்சாரம் வழங்கப் போவது நிலக்கரியோ அல்லது சுற்றுச்சூழலைப் பாதிக்கக் கூடிய பிற உலைகளோ இல்லை. சூரிய ஒளி மூலம் எல்லா இடங்களிலும் பரவலாக மின்சாரம் எடுக்கப்படும். ஒவ்வொரு வீடும் ஒவ்வொரு அலுவலகமும் தங்களுக்குத் தேவையான சூரிய ஒளி மின்சாரத்தை தாங்களே தயாரித்துக் கொள்ளும் நிலை இருக்கும். இதனால், மின்தடை என்பது இருக்காது.

### தண்ணீரால் இயங்கும் வாகனங்கள்

வானத்தில் பறக்கும் கார் எதிர்காலத்தில் இயங்கும் கார்களுக்கு டீசல் தேவையிருக்காது. அதற்குப் பதில் தண்ணீர் இருந்தால் போதுமானது. ஹைட்ரோபவர் தொழில்நுட்பம் மூலம் இயங்கும் இந்தக் கார், தண்ணீரில் உள்ள ஹைட்ரஜனிலிருந்து சக்தி பெற்று இயங்கும். வீதியில் இப்போது ஊர்ந்து செல்லும். கார்கள் இனி வானில் ஒன்றன் பின் ஒன்றாகப் பறந்து செல்லும் ரொக்கெட் கார்களாகும்.

### 'ஆர்டிபிஷியல் டெலிபதி'

நம்முடைய ஐந்து புலனறிவுக்கு (பார்த்தல், கேட்டல், சுவைத்தல்,நுகர்தல் மற்றும் தொடுதல்)அப்பாற்பட்டு நம் எண்ணத்தை இன்னொருவருக்கு புரிந்துகொள்ளச் செய்தல் டெலிபதி என்று அழைக்கப்படுகிறது. தற்போது டெலிபதியை சிலர் செய்து வந்தாலும் இலத்திரனியல் உபகரணங்கள் மூலம் எல்லோரும் டெலிபதியைப் பயன்படுத்தும் காலம் வரும்: நீங்கள் காணும் கனவுகளைப் பகுத்தறிந்து அவற்றைப் பலிக்க வைக்கும் கருவிகள் உருவாக்கப்படும்.

### களத்தில் ரோபோ வீரர்கள்

முக்கிய உலகக்கோப்பை போட்டிகளில் ஒரு சுற்றில் மனித வீரர்கள் ரோபோவை வென்ற பின்னர்தான் அடுத்த சுற்றுக்கு முன்னேற முடியும் என்ற விதிகள் இருக்கும். மனித வீரர்களைக் கொண்ட கால்பந்து ,கிரிக்கெட், ரக்பி அணிகள் ரோபோ வீரர்களுடன் மோத வேண்டியிருக்கும். ரோபோவுடன் சண்டை போட வேண்டிய நிலையேற்படலாம்.

### உரிமையாளரை அடையாளம் கண்டுகொள்ளும் பொருட்கள்

வீட்டிலுள்ள 'ரி.வி.' கையில் உள்ள மொபைல் போன் உள்ளிட்ட இலத்திரனியல் பொருட்கள் உங்களைப் பார்த்தவுடன் நீங்கள்தான் அந்தக் கருவியின் உரிமையாளர் என்பதைப் புரிந்து கொள்ளும். இது பொருட்கள் திருடுபோவதைத் தடுக்கவும் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்கவும் உதவும். இதற்கான ஆராய்ச்சிகள் தற்போது நடக்கின்றன.

### செயற்கை உடல் உறுப்புகள்

உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை தற்போது துவங்கிவிட்டது. ஆனால், உறுப்புகள் மனிதர்களிடமிருந்துதான் பெறும் நிலை இப்போது உள்ளது. இதை மாற்றி மனித உடல் உறுப்பை தனியாக ஆய்வுகூடத்தில் வளர்த்து அதை அப்படியே தேவைப்படுவோருக்கு பொருத்தும் நிலை வரலாம். அப்போது உடல் உறுப்பு பாதிக்கப்பட்டு இறப்போர் எண்ணிக்கை பலமடங்கு குறையும்.

### பசுமை நகரம்

பசுமை நகரங்களுக்கு எதிர்காலத்தில் மிகுந்த வரவேற்பு இருக்கும். வாகனங்கள் இருக்காது. பிளாஸ்டிக் இருக்காது. கழிவுப் பொருட்கள் வெளியில் இருக்காது. சுகந்த மணமும் சுத்தமான தண்ணீரும் இயற்கையுடன் சேர்ந்த வாழிடங்களுக்கும் வரவேற்பு அதிகமாக இருக்கும். இந்த இடங்களில் வாழ்வதற்காக மக்களிடையே போட்டி இருக்கும்.

## விருது வழங்கி கௌரவிப்பு



இலங்கை வங்கியில் 25 வருடகாலம் சேவையாற்றியதற்காக ஊர்காவற்துறை கிளையின் உதவி முகாமையாளர் திருமதி இராஜநாயகம் ஜமுனாதேவி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இலங்கை வங்கி நடத்திய 25 வருட சேவையை பூர்த்தி செய்தவர்களுக்கான விருது வழங்கி கௌரவிக்கும் விழாவிலேயே இவர் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரு ஆண்குறிகளுடன் பிறந்த சீனக்குழந்தை

இந்த செய்தியை அதிசயம் என்பதா, இறைவன் போட்ட அலங்கோலம் என்பதா? ஒரு வயது சீனக் குழந்தைக்கு இரண்டு ஆண் குறிகள்! ஒன்று வழக்கமான இடத்தில் மற்றொன்று நடுமுதுகில். எங்கே தப்பாயிற்று.... தலையைப் பிய்த்துக் கொண்டார்கள் மருத்துவர்கள்.

மத்திய சீனப் பகுதியில் உள்ள ஹெனான் மாவட்டத்தைச் சேர்ந்தவர் 30 வயது லிஜூன். விவசாயி. இவருடைய மனைவிக்கு டியான்ஜின் குழந்தைகள் மருத்துவமனையில் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. குழந்தையை ஆசையுடன் கொஞ்சித் தீர்த்தவர்கள், குழந்தையைத் திருப்பிப் பார்க்கையில் அரண்டு விட்டார்கள். அதன் முதுகின் நடுவில் தண்டுவடத்தின் இடையில் ஏதா ஒன்று நீட்டிக் கொண்டிருந்தது. அதுவும் ஒரு ஆண் குறிதான் என்று மருத்துவர்கள் சொன்னபிறகு தான் அவர்களுக்கே அது புரிந்தது.

பெற்ற மனங்கள் கவலை கொண்டன. சீன மருத்துவ உலகமே இந்தக் குழந்தையைக் கண்டு அதிசயித்தது. என்ன செய்வது?

இப்படி ஒரு குழந்தை இரண்டு ஆண் குறிகளுடன் (வெவ்வேறு இடங்களில்) பிறந்தது இவ்வுலகிற்கே புதிய செய்தி. இதை மருத்துவ ஆங்கிலத்தில் Fetus in Fetu (FIF) என்கிறார்கள்.

இது மாதிரியான கூடுதல் உறுப்புப் பற்றிய செய்தி எந்த மருத்துவ புத்தகத்திலும் இல்லை. அது எப்படி அந்த இடத்தில் ஆண்குறி முளைத்தது என்ற கேள்விக்கு விடை கிடைக்காமல் போனாலும் அது அந்த இடத்தில் இருப்பது அந்தக் குழந்தையின் வாழ்க்கையைப் பாதிக்கும் என்று உணர்ந்த மருத்துவர்கள் அந்த கூடுதல் ஆண் குறியை அறுவை சிகிச்சை மூலம் நீக்கிவிட முடிவு செய்தார்கள்.

சுமார் மூன்று மணி நேரம் நடந்த அறுவை சிகிச்சையில் குழந்தையின் முதுகில் இருந்த கூடுதல் ஆண்குறி நீக்கப்பட்டது. குழந்தை இப்போது சுகம்.

இறைவனே! இயற்கையே! எப்போதாவது அதற்கும் தடுமாற்றம் ஏற்படும் போலிருக்கிறது.

# கடத்தலை கண்டுபிடிக்க முடியாத பொலிஸ்காரர்



இரு நாடுகளின் எல்லையூடாகப் பயணம் செய்பவர்களைச் சோதனை செய்வதற்காக பணிக்கமர்த்தப்பட்ட எல்லையோரப் பொலிஸ்காரர்களில் ஒருவர் சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஒருவரை தடுத்து நிறுத்தினார்.

சோதனை செய்துபார்த்த போது சைக்கிளில் இருந்த பையிற்குள் வெறும் மண்தான் கிடந்தது. அந்த நபர் கடத்தல் எதிலும் ஈடுபடவில்லை என்பதை உணர்ந்தவராக பொலிஸ்காரர் தொடர்ந்து செல்ல அவரை அனுமதித்தார்.

இவ்வாறாக அந்த நபர் மூன்று வருடங்களாக பையிற்குள் மண்ணை எடுத்துக் கொண்டு சைக்கிளில் அயல்நாட்டுக்குத் தினமும் சென்று வந்தார். பொலிஸ்காரரும் சோதனை செய்து விட்டு அந்த ஆளை அனுப்பிவிடுவார். அவர் சட்ட விரோதமான காரியம் எதிலும் ஈடுபடவில்லை என்பதே பொலிஸ்காரரின் நம்பிக்கையாக இருந்தது.

ஒருநாள் பொலிஸ்காரர் கடமை முடிந்து வீடு செல்லும் வழியில் மதுபான விடுதியொன்றுக்குச் சென்றார். பையில் மண்ணை எடுத்துக் கொண்டு தினமும் சைக்கிளில் செல்லும் அந்த நபரும் மதுபான விடுதிக்குள் மது அருந்திக் கொண்டிருந்தார்.

அவரின் அருகில் அமர்ந்திருந்து மது அருந்திக் கொண்டே பொலிஸ்காரர் கேட்டார் உண்மையிலேயே சத்தியம் பண்ணிச் சொல்கிறேன். நீ கூறுவதை எவரிடமும் கூறமாட்டேன். பையிற்குள் இரண்டு, மூன்று கைப்பிடி மண்ணை எடுத்துக் கொண்டு எதற்காக தினமும் அடுத்த நாட்டுக்குப் போய் வருகிறாய்? நீ ஏதாவது கடத்தல் வேலை செய்கிறவனாகவும் எனக்குத் தெரியவில்லையே. மண்ணைக் கடத்தி பெரும் இலாபம் சம்பாதிக்க முடியும். ஆனால், நீ கொண்டு போகிற அளவு மண்ணை யாரும் வாங்கவும் மாட்டார்களே.

சைக்கிளோட்டி சிரித்தபடி பதில் சொன்னார். தயவுசெய்து எவரிடமும் சொல்லிவிடாதீர்கள். உங்களை நம்பித்தான் சொல்கிறேன். நான் கடத்துவது மண்ணையல்ல. தினமும் ஒரு சைக்கிளை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு விடிவை நோக்கி...

உணர்வுகள் விலங்கிடப்பட்டதால்
என் உள்ளமும் மௌனமாகிப்போ
னது
துயரத்தின் தூறல்களில்
நனைந்து துளிர்த்து
அலைமோதுகின்றது
என் நினைவுகளின்
நிசப்தங்கள்

வெளுத்துப்போன
வாழ்வின் சாயல்கள்
நிறம் மாறிப் போனதால்
என் எதிர்பார்ப்புகளும்
நகர்ந்து நகர்ந்து
நரைத்துப் போனது

வலிகளுக்குள் பலியாகிப்போன
பாசத்தின் விதைகள்
முளைவிட்டெழுகின்றன
முன்னைய பொழுதின்
முகாரிகளை துகிலுரிய

சிரிப்பின் சிங்காரமும்
அழுகையின் முக்காட்டிற்குள்
முடங்கிப்போக
நடைப்பிணமாகிப்போனது
என் வாழ்வின் நகர்வுகள்

அவலங்களின் அகலக்கால் பதிப்பில்
என் நம்பிக்கையின் ஆணி வேர்கள்
ஆழமாக... இன்னும்
துளிர்த்துக் கொண்டிருக்கின்றன
ஒரு விடிவை நோக்கி...

**நாகேஸ்வரா- சண்டிலிப்பாய்**

## அசுர சங்காரம்

நீண்ட போராட்டம்
அதர்மத்தை வெல்வதற்காய்
அராஜகத்தை சாய்ப்பதற்காய்
ஊழலை ஒழிப்பதற்காய்
உத்தமரைக் காப்பதற்காய்
வார்த்தைக் கோலமாய்
வர்ணனை சுமந்தபடி
நீண்டு தொடர்கிறது...

சந்துக்கு வருவோர்கள்
சண்டைக் கருவி தருவோர்கள்
அண்டிக்கொடுத்து நல்ல
வரங்கேட்டு துடிப்போர்கள்
தின்று கொழுத்து
திடகாத்திரர் ஆனதெல்லாம்
அதர்மத்தை ஒழித்து மண்ணில்
அகிம்சையை நாட்டவாமோ?

அசுரர் குடியறுக்க
அன்றும் இறைமுயற்சி
சண்டை சங்காரம்
மலநீக்கம் ஈடேற்றம்
என்று பலவுரைக்கும்
தொடர்கதைகள் நாமறிவோம்

பொங்கி மடைவைத்துப்
பூப்போட்டு துதிசெய்து
விந்தை நிறை விரதம்
வியனுலகில் கொண்டாலும்
'அசுரர் மண்ணில் அழுவ
துண்டு
அசுரத்தனம்' என்றழியும்?
(சந்து - சமாதானம்)

**ச.லலீசன்**
**அச்சுவேலி.**




## அகதிப்பட்டம்

பள்ளிப் படிப்பினில்
படு சுட்டிப் - பட்டம்
புலமைப் பரீட்சையில்
புள்ளியால் உயர்ந்தவன்-பட்டம்
சாதாரண தரத்தில் பத்து 'ஏ'
சாதனையாளன்-பட்டம்
உயர்தரத்தில் மூன்று 'ஏ'
உயர்விருதாளன்-பட்டம்
இன்று எனக்கு...!
விதியிட்ட பட்டம் யாதோ...?
இரு கால்களையிழந்த
இளைஞன் ஊனப்-பட்டம்
கண்ணீர் கூட கசக்கிறது
முட்கம்பி வேலிக்குள்...
மூச்சுக்காற்று முனகிறது...
அகதிப்-பட்டத்தை...

**அ.ஸ்ரீலக்ஷி**
**உடுப்பிட்டி**

## உனக்குமா புரியவில்லை?

தனித்திருக்கிறேன்
பெயர் சொல்லி அழைக்க
யாருமில்லாத நிலையில்
பேச்சுத் துணைக்குக் கூட எலருமின்றி
தனிமைப்படுத்தப்பட்டதால்
தவித்துப்போய் தவமிருக்கின்றேன்
ஆனால் தவமிருக்கவில்லை

விழித்திருக்கின்றேன்
விழி வெள்ளம் கரைபுரண்டு பெருகுவதால்
இமைகள் என்னும் அணைகள்
இணைய முடியாது விலகியிருப்பதால்
விடிய விடிய விழித்திருக்கின்றேன்
ஆனால் விரதமிருக்கவில்லை
பசித்திருக்கின்றேன்

உன்ன வேண்டும் என்ற உணர்வின்றி
உள்ளத்துள் இயக்கங்கள் செயலிழந்து போனதால்
உலகையே மறந்து பசித்திருக்கின்றேன்
ஆனால் நோன்பிருக்கவில்லை

தவமின்றித் தனித்திருந்து
விரதமின்றி விழித்திருந்து
நோன்பின்றி பசித்திருப்பது
மரணத்தை நான் யாசிப்பது
இறைவா! உனக்குமா புரியவில்லை?

**மெல்லியல்,**
**புலோலி,யாழ்ப்பாணம்.**



## திரும்பக் கேட்காதே!

அன்பே!
உன் இதயத்தை நீ எனக்கு
கடனாகத் தந்திருந்தால்-அதைத் திருப்பி
தந்துவிடுவேன்.

காணிக்கையாக தந்துவிட்டாயே
அதை எப்படி நான் திருப்பித் தருவது?
என் இதயமெனும் நதியில்
நீந்திக் கொண்டிருக்கும்
உன் நினைவுகளை
எப்படி நான் திருப்பித் தருவது?

என் மனதினுள் கூடாரம் அமைத்து
குடிகொண்டிருக்கும் உன்னை
எப்படி நான் திருப்பித் தருவது?
இனிமேல் என்னிடம்
இவைகளைக் கேட்காதே!
வேண்டுமென்றால் என் உயிரையே கேள்
உனக்காக அதை தந்துவிடுகிறேன்

**காத்தலிங்கம் உதயமலர்**
**கொத்தியகாடு,தொண்டமனாறு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஸ் பயண அவதிகள்



மக்களின் போக்குவரத்துகளில் இன்று அதிகம் ஆதிக்கம் செலுத்துபவை பஸ்களாகவேயுள்ளன. நடுத்தர வர்க்கம் மற்றும் வறுமைப்பட்ட மக்கள் அனைவரும் தமது போக்குவரத்துக்காக இந்த பஸ்களையே நம்பியுள்ள நிலையில், இவ்வாறான பஸ் பயணங்களில் பயணிகள் படும்பாடுகளும் கொஞ்சநஞ்சமானதல்ல.

பஸ் நிலையங்களில் காத்திருப்பது முதல் தாம் போக வேண்டிய இடத்திற்குச் சென்று இறங்கும் வரை இவர்கள் அவஸ்த்தைகள், அருவருப்புகள், முட்டி மோதல்கள், சில்மிஷங்கள், பாலியல் சேட்டைகள், அவமதிப்புகள், மிரட்டல்கள், எச்சரிப்புகள், சில வேளைகளில் கைகலப்புகள் என பல்வேறுபட்ட அனுபவங்களையும் அவலங்களையும் தினமும் சந்திக்க வேண்டியுள்ளது.

இந்த பஸ்கள், அது அரச பஸ்ஸாக இருக்கட்டும், தனியார் பஸ்ஸாக இருக்கட்டும். எதுவாக இருந்தாலும் பஸ் நிறுத்தங்களில் நிற்காது சற்றுத் தள்ளியே கொண்டு சென்று நிறுத்துவார்கள். பஸ்ஸிற்காகக் காத்திருக்கும் பயணிகள் அந்த பஸ்ஸை விரட்டிச் சென்று உயிரைப் பணயம் வைத்தே ஏற வேண்டும். ஏனெனில், பின்னால் வரும் பஸ் தன்னை முந்திச் சென்று விடக்கூடாது என்பதில் இந்த பஸ் சாரதி அவதானமாக இருப்பதாலேயே இவ்வாறு செய்கிறார்.

அடுத்ததாக பஸ்ஸில் ஏறியவுடன் பயணச் சீட்டைப் பெறுவதில் இருந்தே பிரச்சினை ஆரம்பமாகும். தப்பித்தவறி மாற்றிய பணம் இல்லாமல் பெரியதொரு தாளாகக் கொடுத்து விட்டால் மிகுதிப் பணத்தை வேண்டுவதற்கிடையில் பெரும் போராட்டமே நடத்த வேண்டியிருக்கும். பஸ்ஸில் ஒருபுறம் பயணிகள் நெருக்கித் தள்ள, உடல் பிதுங்கி, விழி பிதுங்கி, மூச்சுத் திணறி, நெளிந்து கொண்டிருக்கும் பயணியை பஸ் நடத்துனர் முன்னால் போ! முன்னால் போ!! என கழுத்தில் பிடித்துத் தல்லாத குறையாகத் தள்ளுவார். இந்த அவஸ்த்தைக்கு மத்தியில் மிகுதிப் பணத்தைக் கேட்டால் 'அப்புறம் வாங்கிக்கோ' அல்லது 'இறங்கும் போது வாங்கிக்கோ' என்ற பதிலே நடத்துனரிடம் இருந்து கிடைக்கும். அந்தப் பணத்தை வாங்கும் வரை நடத்துனரை பயணி கண்கொத்திப் பாம்பாகவே கவனித்துக் கொண்டிருக்க வேண்டும். நடத்துனரோ பயணியை எவ்வாறேனும் ஏமாற்றி விட வேண்டும் என்பதற்காக பயணி முன்பக்கத்தில் நின்றால், பின்பக்கத்திலும் பின்பக்கத்தில் நின்றால் முன்பக்கமாக இடம்மாறித் திரிவார்.

நிறை மாதக் கர்ப்பிணி போல் பயணிகளை நிரப்பியபடி செல்லும் பஸ்களை குறிவைத்து ஏறுவதற்கென்றே சில ஜொல்லுப் பேர்வழிகளும் சில்மிஷ மன்னர்களும் பஸ் நிலையங்களில் கால்கடுக்கக் காத்திருப்பார்கள். இவர்களில் அநேகமானவர்கள் அறுபது வயதைத் தாண்டியவர்கள் என்பதுதான் வேடிக்கையானது. நெருக்கியடித்தவாறு பஸ்களில் ஏறிக்கொள்ளும் இவர்கள் இளம் பெண்கள் நிற்கும் இடங்களாகப் பார்த்தே போய் நிற்பார்கள். சாரதி 'பிறேக்' பிடிக்கிறாரோ இல்லையோ இவர்கள் அடிக்கடி 'பிறேக்' பிடித்தது போல் இந்த இளம் பெண்கள் மீது சாய்வார்கள், உரசுவார்கள், இடிப்பார்கள். இதன் மூலம் இவர்கள் பேரின்ப பெருவாழ்வைப் பெற்றதைப் போன்று திருப்தியடைவார்கள். இவர்கள் இடிப்பதை, உரசுவதை தற்செயலான நிகழ்வாகவே பெண்கள் கருதுவதால் இந்தப் பெருசுகளின் சேட்டைகள் பெரும் தொல்லைகளாகவே உள்ளன. சில வேளைகளில் யாராவது ஒரு பெண் முறைத்துப் பார்த்தால் இவர்கள் உடனடியாக 'பாருங்க பிள்ளை இந்த டிரைவர் மார் என்ன ஓட்டம் ஓடுறாங்க.... பேய் ஓடின மாதிரி பஸ்ஸை ஓட்டினா எங்களைப் போன்ற வயது போனவர்களுக்கு எவ்வளவு கஷ்டம்' என்று சொல்லி அனுதாப அலைகளை அள்ளித் தப்பிக்கொள்வார்கள்.

பஸ் பயணத்தில் சில பேர் தலைகளில் எண்ணெயை வழிய வைத்தபடி ஏறுவார்கள். இவர்களிடமிருந்து தமது ஆடைகளை பாதுகாத்துக் கொள்வதில் பயணிகள் படும் பாடும் பெரும்பாடு. இன்னும் சிலர் பஸ்களில் ஏறினால் துர்நாற்றம் அடிக்கும். ஆனால், அவர்கள் அதைப் பற்றி எதுவும் கவலைப்படாமல் பயணிகளுடன் நெருக்கியடித்தவாறு நிற்பார்கள். ஆனால், எதுவும் செய்ய முடியாது. மூக்கைப் பொத்தினால் முறைத்துப் பார்ப்பார்கள். அதனால் சகித்துக் கொண்டே பயணிக்க வேண்டியதுதான். சிலர் வெற்றிலை, பாக்கை போட்டு விட்டு பஸ் ஜன்னலுக்குள்ளால் எட்டித் துப்புவார்கள். அந்த எச்சில் பின் ஆசனங்களில் இருப்பவர்களின் முகத்தில், ஆடையில் தூவானமாகப்படும். ஆசனத்திலிருக்கும் சிலர் ஏதோ நீண்ட தூரப் பயணம் செய்வது போல் தூங்கத் தொடங்கி விடுவார்கள். தூங்குபவர்கள் பக்கத்திலிருப்பவரின் தோளில் தலையைச் சாய்த்துத் தூங்குவார்கள்.

இவ்வாறு பஸ் பயணத்தில் நடத்துனர்களால் மட்டுமன்றி, சக பயணிகளாலேயே அவதிப்பட வேண்டிய பல சம்பவங்கள் நடப்பதுண்டு. பஸ்களில் பயணிப்பதானால் பொறுமை மிக அவசியம். ஏனெனில், அதிகமான தனியார் பஸ் நடத்துனர்கள், சாரதிகள் கல்வி அறிவு குறைந்தவர்களாகவே இருப்பதால் அவர்களிடம் நாகரிகமான நடைமுறையை எதிர்பார்க்க முடியாது. நாம் ஏதாவது நியாயம் கேட்கப் போனால் அவர்கள் அநியாயமாகவே நடந்து கொள்வார்கள். இதனால், எமக்கு அவமானமே மிஞ்சும். தமது பஸ்களில் வரும் பயணிகளுடன் பண்பாக நடந்து கொண்டாலேயே அவர்கள் பஸ்களில் பயணிக்க விரும்புவார்கள் என்பதை நடத்துனர்களோ, சாரதிகளோ புரிந்து கொள்வதில்லை. பயணிகளும் இதைப் புரிய வைப்பதில்லை.


பஸ் பயணங்களில் அவஸ்த்தைகள் ஏற்பட்டாலும் சில சமயங்களில் சுகமான அனுபவங்களும் ஏற்படுவதுண்டு. எனவே, என்ன செய்வது எமது தலைவிதி என்று நினைத்துக் கொண்டு பஸ் பயணத்தைத் தொடர வேண்டியதுதான்.

**எச்.ஹுஸ்னா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முதலிடம் முக்கியமல்ல!



ஆண்கள் டெனிஸ் நட்சத்திரம் ஸ்பெயின் வீரர் ராபெல் நடால் காயம் காரணமாக ஓய்விலிருந்து வந்த இவர் தற்போது மீண்டும் போட்டிகளில் பங்கேற்று வருகிறார். இருப்பினும் இன்னும் எந்தத் தொடரிலும் பட்டம் வெல்லவில்லை. தற்போது இரண்டாவது இடத்திலிருக்கும் நடால் தனக்கு 'நம்பர் -1' இடம் முக்கியமல்ல, போட்டிகளில் வெல்வதுதான் முக்கியம் என்கிறார்.

நடால் இதுவரை 6 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றுள்ளார். டெனிஸில் நீண்டகாலமாக முதலிடத்திலிருந்து வந்த சுவிற்ஸர்லாந்தின் ரோஜர் பெடரரை பின்னுக்குத் தள்ளி கடந்த ஆண்டு 'நம்பர்-1' வீரர் இடத்தைப் பிடித்தார். இந்நிலையில், முழங்கால்களில் தசை நார்கள் பாதிப்படைய இந்த ஆண்டு பிரெஞ்ச் ஓப்பனில் நான்காவது சுற்றுடன் வெளியேறினார். விம்பிள்டன் தொடரில் நடால் பங்கேற்கவில்லை. இதனால் இவரது 'நம்பர்-1' இடம் பறிபோனது.

இதுவரை யு.எஸ். ஓப்பன் பட்டத்தை வெல்லாத நடால் காயத்திலிருந்து மீண்டு வந்து நம்பிக்கையுடன் கலந்துகொண்டார். ஆனால், இதிலும் அரையிறுதியுடன் வெளியேறினார். பின் ரோஜர்ஸ் மாஸ்டர்ஸ் தொடரில் காலிறுதி, வெஸ்டர்ன் சவுத்தர்ன் மாஸ்டர் தொடரில் அரையிறுதி மற்றும் சமீபத்தில் முடிந்த ஷாங்காய் ஓப்பனில் என இவரது பயணம் வெற்றியில்லாமல் முடிகிறது. இது குறித்து நடால் கூறியதாவது;

எனக்கு அடுத்த சில ஆண்டு நல்ல வாய்ப்புகள் கிடைக்கும் என நினைக்கிறேன். எனது முழங்கால்களை அவ்வப்போது டாக்டரைக் கொண்டு சோதனை செய்து வருகிறேன். இப்போதுதான் நம்பிக்கை வந்துள்ளது. மீண்டும் கடுமையாகப் பயிற்சி செய்து சிறப்பான முறையில் வெற்றி பெற முயற்சிப்பேன். பல்வேறு சிகிச்சைகளுக்குப் பின் போட்டிகளில் பங்கேற்று வருகிறேன்.

பொதுவாக காயம் காரணமாகத் தொடர்களில் கலந்துகொள்ளாமலிருப்பது அல்லது தோல்வியடைந்து வெளியேறுவது என்பது எப்போதும் சிரமமானது தான். இந்த ஆண்டு விம்பிள்டன் தொடரின் போது நான் தயாராக இல்லை என்பதுதான் உண்மை. அடுத்த ஆண்டு சிறப்பாக மீண்டு வருவேன்.

**வாய்ப்பு வரும்:** 'நம்பர்-1' தரவரிசையில் இருந்தால் சந்தோஷமடைவேன். இருப்பினும் எனக்கான இந்த வாய்ப்பு மற்றொரு முறை வரும். ஆனால், இப்போதைக்கு எனது இலட்சியமெல்லாம் போட்டிகளில் பங்கேற்றுத் தொடர்களை வெல்வதுதான். 'நம்பர்-1' தரவரிசை குறித்துக் கவலைப்படுவதில்லை என்றும் தெரிவித்தார்.



# வருவதும்... போவதும்...

**2007** இல் இந்திய ஒருநாள் அணியிலிருந்து நீக்கப்பட்டார் டிராவிட். இரண்டு ஆண்டுகளுக்குப் பின்பு திடீரென மீண்டும் ஒருநாள் அணியில் சேர்க்கப்பட்டார். தற்போது அவருக்கே தெரியாமல் மறுபடியும் அணியிலிருந்து நீக்கப்பட்டு பரிதாப நிலையில் உள்ளார். ஒரு வீரருக்கு நேர்ந்த அவமானம் குறித்து இங்கு காணலாம்.

இந்திய கிரிக்கெட் அணியின் 'பெருஞ்சுவர்' ராகுல் டிராவிட் (37 வயது). டெஸ்ட் (10,823) மற்றும் ஒருநாள் போட்டிகளில் (10,765) பத்தாயிரம் ஓட்டங்களுக்கு மேல் குவித்துள்ள வீரர். 2007 இல் உலகக் கிண்ணத் (50 ஓவர்) தோல்விக்குப் பின் அணியின் கப்டன் பதவியை உதறிய இவரைத் தேர்வுக்குழுவினர் ஒருநாள் அணியை விட்டு உதறிவிட்டனர்.

இந்நிலையில், அதிரடித் தொடக்க வீரர் செவாக் காயம் காரணமாக அணியை விட்டுவிலகினார். திடீரென 'ருவென்ரி-20' உலகக் கிண்ணத்தில் சரிவு ஏற்பட்டது. அப்போது, எதிரணியின் 'ஷோர்ட் பிட்ச்' பந்துகளை சமாளிக்க சரியான ஆள் டிராவிட்தான் என முடிவு செய்த தேர்வுக்குழுவினர், அவரே எதிர்பாராத நிலையில், இரண்டு ஆண்டுகளுக்கு பின் மீண்டும் ஒருநாள் அணிக்குத் தேர்வு செய்தனர்.



டிராவிட்டும் தனது தேர்வை 'நியாயப்படுத்தும்' விதமாக இலங்கையில் நடந்த முக்கோணத் தொடர், தென்னாபிரிக்காவில் நடந்த சாம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்களில் 2 ஆவது இடம் பிடித்து (5 போட்டிகளில் 180 ஓட்டங்கள்) சாதித்தார். ஆனால், தனது தேர்வை நியாயப்படுத்திய டிராவிட்டை நியாயமின்றி எவ்வித சத்தமும் இல்லாமல் திடீரென அணியை விட்டு தற்போது தூக்கியுள்ளனர்.

**இது சரிதானா:**

339 ஒருநாள் போட்டிகளில் விளையாடிய டிராவிட்டை ஒரு புதுமுக வீரரை கையாண்டது போல் செய்தது சரிதானா என்பதற்கு தேர்வுக்குழுவினர்தான் விளக்கமளிக்க வேண்டுமென இந்திய ரசிகர்கள் கேட்கின்றனர்.

உண்மையில் செவாக்,யுவராஜுக்கு பதில் அணியிலிருந்து வெளியேற வேண்டியது தினேஷ் கார்த்திக், விராத் கோஹ்லியும் தான். ஆனால், தேர்வுக்குழுவினர் ரெய்னா,விராத் கோஹ்லி மற்றும் ரவீந்திர ஜடேஜா போன்ற இளம் வீரர்களை நடுவரிசையில் பயன்படுத்தலாமென நினைத்துள்ளனர். இவர்கள் சலஞ்சர் கிண்ணத் தொடரில் ஓட்டமெடுக்க திணறியது எல்லோருக்கும் தெரியும்.

**மீண்டும் எடுப்பார்கள்:** அடுத்து வரவிருக்கும் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் ரெய்னா ஒருவேளை மீண்டும் 'ஷோர்ட் பிட்ச்' பந்துகளில் ஆட்டமிழக்க ஆரம்பித்துவிட்டால் என்ன செய்வார்கள்? போனால் போகிறது என்று விட்டுவிட்டு அடுத்த ஆண்டு தென்னாபிரிக்கா செல்லும் இந்திய அணியில் டிராவிட்டுக்கு மீண்டும் வாய்ப்பளிக்கலாம் எனத் தேர்வுக்குழுவினர் நினைத்திருப்பார்கள் எனத் தெரிகிறது.

தன்னை அணியைவிட்டு நீக்கியது குறித்து செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்வதை டிராவிட் தவிர்த்தார். இது குறித்து டிராவிட் கூறுகையில்; 'எந்தக் கேள்வியும் என்னிடம் கேட்காதீர்கள். நான் உங்களுக்கு எந்தப் பதிலும் சொல்லப்போவதில்லை' என்றார்.

**வடேகர் கவலை:** டிராவிட் நீக்கம் குறித்து முன்னாள் இந்திய வீரர் அஜித் வடேகர் கூறுகையில்; 'அவுஸ்திரேலிய வீரர்களின் வேகப்பந்து வீச்சைச் சமாளிக்க டிராவிட் சரியான வீரர். அவர் சிறப்பாக செயல்பட்ட நிலையில் தேர்வு செய்யாமல் விட்டது மிகப்பெரிய தவறாகும்' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எவரை எவர் வெல்லுவரோ?




இந்திய-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 7 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடர் நாளை ஞாயிற்றுக்கிழமை குஜராத் மாநிலம் வதோதராவில் பகல் நேர ஆட்டத்துடன் தொடங்குகிறது.

இரு தரப்பு ஒரு நாள் தொடர்களில் இந்தியா சமீப காலமாக பல தொடர்களை கைப்பற்றி வந்தாலும், இருபதுக்கு 20 உலகக் கிண்ணத்தொடரில் இருந்து வெளியேற்றம், சாம்பியன் கிண்ணத்திலிருந்து வெளியேற்றம் ஆகியவற்றால் இந்திய அணி சற்றே சந்தேகத்திற்குரிய அணியாக தோற்றமளிக்கிறது.

மாறாக தொடர்ச்சியான கிரிக்கெட் போட்டிகளால் கடந்த 12 மாதங்களாக களைப்படைந்துள்ள அவுஸ்திரேலிய அணி, சாம்பியன் கிண்ணத்தை வென்ற மனோதிடத்தில் இந்தியா வந்திறங்கியுள்ளது.

இந்திய அணிக்கும் அவுஸ்திரேலியா அணிக்கும் உள்ள மிகப் பெரிய வித்தியாசமாக பலர் பல நுணுக்கங்களை சுட்டிக்காட்டினாலும், அடிப்படையில் ஒரு மிகப்பெரிய வித்தியாசம் உள்ளது. அவுஸ்திரேலியா அணி எப்போதும் வெற்றியை கருத்திற்கொண்டே தங்கள் கிரிக்கெட் ஆட்டத்தை ஆக்ரோஷமாக விளையாடக் கூடியவர்கள். ஆனால் இந்திய அணியில் சமீப காலங்களாக தோல்வியடைவது என்பது ஒரு பிரச்சினையாக இல்லாமல், மிகவும் சாதாரணமாக எடுத்துக்கொள்ளப்படுகிறது.

சாம்பியன் கிண்ணத்தில் இந்திய அணி தோல்வியைத் தழுவியது பற்றி அணியிலுள்ள இளம் வீரர்கள் வருந்துவதில்லை. அவர்களுக்கு தோல்வி கவலையளிப்பதாயில்லை என்று மூத்த வீரர் ஒருவர் தன்னிடம் கூறி வருந்தியதாய் இந்திய கிரிக்கெட் சபையின் நிர்வாக அதிகாரி ரத்னாகர் ஷெட்டி சமீபத்தில் தெரிவித்திருந்தது கவனிக்கத்தக்கது.

சேவாக் வந்து விட்டார், யுவராஜ் வந்து விட்டார், எனவே வெற்றி நமதே என்று இந்திய ரசிகர்கள் எதிர்பார்ப்பது வெற்றியை அடைய ஒரு அணி என்னவாக இருக்க வேண்டும் என்ற நுணுக்கங்களை அறியாத ஒரு இரசிக மனோ நிலைதான்.

டிராவிட் போன்ற வீரர்களின் ஆட்ட முறை பெரும்பாலும் டெஸ்ட் போட்டிகளுக்கு மட்டுமே பொருத்தமானது. ஏனெனில் அவர் நின்று ஓட்டங்களை எடுப்பவர். ஆனால் இன்றைய ஒரு நாள் ஆட்டங்களோ, ஒரு முனையில் ஒரு வீரர் அதிரடியைக் காண்பிக்கவேண்டும் என்பதாக மாற்றமடைந்துள்ளது. சேவாக் ஆட்டமிழந்து விட்டால் ராவிட்டை எதிரணியினர் சுலபமாக கட்டிப்போட்டு விடுகின்றனர். அவர் ஒன்று, இரண்டு என்று ஓட்டங்களை எடுக்கக் கூட திணறுகிறார்.

மேலும் ஒரு வீரர் சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்குப் பிறகு அவரை ஒதுக்கிய ஒரு கிரிக்கெட் வடிவத்திற்கு மீண்டும் வரும் போது 'பிக் பேங்' என்று கூறுவார்களே அது போன்ற ஒரு பழி தீர்க்கும் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் அவரோ, தன் பழைய ஆட்டத்திற்காகத்தான் தன்னை அணியில் மீண்டும் தேர்வு செய்திருக்கிறார்கள் என்பது போல் விளையாடினார்.

கங்குலியை அணியிலிருந்து நீக்கி விட்டு மீண்டும் தேர்ந்தெடுத்தனர். ஆனால் கங்குலி, 'என்னையா அணியிலிருந்து நீக்கினீர்கள்' என்பது போல் ஒரு பழி தீர்க்கும் விதமாக ஆட்டத்தில் திறமையை வெளிப்படுத்தினார். அத்தகைய மனோ நிலை டிராவிட்டிடம் இல்லை. அது மட்டுமல்லாது, ஒரு நாள் போட்டிகளில் அவர் என்றுமே இந்திய அணிக்கு ஒரு சுமையாக மட்டுமே இருந்திருக்கிறார் என்ற கருத்து நிலவுகிறது. கங்குலி அவரை அணியிலிருந்து தூக்க மனம் வராமல் தான் அவரை விக்கெட் காப்பாளராக பணியாற்றச் செய்து இன்னொரு துடுப்பாட்ட வீரர் கூடுதலாக உள்ளே நுழைந்தார். அது கங்குலியின் உத்தியும் திறமையும் சார்ந்தது. இப்போது தோனி அவரை எவ்வாறு பயன்படுத்துவது என்று தெரியாமல் திணறுகிறார். ஸ்லிப்பில் நின்று கேட்சை கோட்டை விடுகிறார் டிராவிட்.

இதே வாதத்தை ஏன் சச்சினுக்கு வைப்பதில்லை என்று கேட்கலாம். சச்சின் டெண்டுல்கர் மீதிருக்கும் விமர்சனமெல்லாம் அவர் பல சமயங்களில் தன் திறமைக்கேற்ப விளையாடி அணியை வெற்றிக்கு அழைத்துச் செல்லாமல் கைவிட்டு விடுகிறார் என்பதே. உதாரணமாக 2003 உலகக் கிண்ண இறுதிப்போட்டி. ஆனால் ஒவ்வொரு முறையும் சச்சின் மீதும் கடும் விமர்சனங்கள் எழும் போதும் அவர் தன்னை நிரூபித்து பதிலடி கொடுத்துள்ளார். கடைசியாக இலங்கையில் நடைபெற்ற ஒரு நாள் இறுதிப் போட்டியில் அவர் எடுத்த அதிரடி 138 ஓட்டங்களே இதற்கு சாட்சி.

மேலும் இந்த வயதிலும் அவர் 'டீப்மிட் விக்கெட், டீப்தேர்ட்மேன் என்று எல்லைக்கோட்டருகே களத்தடுப்பு செய்து தன் பலமான த்ரோவினால் எதிரணியினரின் இரண்டாவது ஓட்ட முயற்சியை முறியடித்துள்ளார். அவர் ஒரு பாதுகாப்பான களத்தடுப்பாளர். சமீபத்தில் ஒரேயொரு கேட்சை டீப் திசையில் கோட்டை விட்டார். ஆனால் அதற்காக அவர் பெரிதும் வருந்தினார். எனவே சச்சின் உலகக்கிண்ண கிரிக்கெட்டில் ஒரு விதி விலக்கு. டிராவிட்டிற்கு வைக்கப்படும் அளவு கோல்கள் சச்சினுக்கு ஒரு நாளும் பொருந்தாது. எனவே டிராவிட் ரசிகர்கள் அவரை அணியிலிருந்து நீக்கியது நன்மைக்கே என்பதை புரிந்து கொள்ளவேண்டும். அணியின் நன்மை மட்டுமல்ல, டிராவிட்டிற்கும் இது நன்மை தான்.

**அணிகளின் பலமும் பலவீனமும்**

இந்திய அணியில் மீண்டும் சேவாக், யுவராஜ் வந்திருப்பது பெரியளவில் பலம் தான் என்றாலும், சுரேஷ் ரெய்னாவின் சந்தேகத்திடமான போர்மை பதிலீடு செய்யும் வேறு இல்லாதது ஒரு பெரிய குறை. ரோஹித் ஷர்மாவை அணியில் வைத்திருக்கவேண்டும். இயன் சப்பல் சமீபத்தில் சாம்பியன் கிண்ண கிரிக்கெட்டில் வர்ணனை நிகழ்த்திக் கொண்டிருந்த போது, ரோஹித் சர்மா அணியில் இல்லாதது தனக்கு ஆச்சரியமாக உள்ளது என்றார். அவரது திறமை அபாரமானது என்று புகழ்ந்தார்.

ஆனால் இஷாந்த் ஷர்மா சரியாக வீசவில்லை எனில் முனாப், பிரவீண், சுதீப் தியாகி என்று மாற்று வீச்சாளர்கள் அணியிலிருப்பது நல்ல சிந்தனை.

தோனியின் தலைமை அணுகு முறையில் மாற்றங்கள் தேவைப்படுகிறது. சாம்பியன் கிண்ணத்தில் இந்தியாவுக்கு எதிராக 54/3 என்று திணறி கொண்டிருந்த பாகிஸ்தான் அணியை ஹர்பஜன் சிங் காப்பாற்றினார். தொடர்ந்து தேர்ட் மேன் திசையில் பவுண்டரிகளாக சென்று கொண்டிருக்கிறது. பந்து வீச்சில் வழக்கமான பிளைட், டைட், திரும்பம் எதுவும் இல்லாமல் நேர் நேராக வீசிக் கொண்டிருக்கிறார் ஹர்பஜன். ஆனால் தோனி ஒரு இடையீடு கூட செய்யாமல் தொடர்ந்து பந்தை அவர் கையில் கொடுத்தார்.

கங்குலியாய் இருந்திருந்தால், 'இதோ பார், தேர்ட் மேன் திசையில் அடுத்த ஓட்டம் கொடுக்கப்பட்டால் நீ உன் இடத்தை இழப்பாய்' என்று எச்சரித்திருப்பார்.கும்ப்ளே போனவுடன் இந்திய அணியின் பந்து வீச்சை வழி நடத்திச் செல்பவர் என்றெல்லாம் நாம் அவரை தலையில் தூக்கி வைத்துக்கு கொண்டு ஆடி விட்டோம். இதனால் அவருக்கு ஒரு 'செக்' இல்லாமல் போய்விட்டது. வெங்கடேஷ் பிரசாத் ஒரு பந்து வீச்சு பயிற்சியாளராக இங்குதான் தோல்வி கண்டார். இஷாந்த் ஷர்மா பந்தில் வேகமும் இல்லை. ஸ்விங்கும் இல்லை. திசையும் இல்லை அளவும் இல்லை. ஆனால், இவர் பார்த்துக் கொண்டிருந்தார். அதனால்தான் தன் பதவியை இழந்துள்ளார்.

எனவே, ஹர்பஜன் சிங்கை அவ்வவ்போது உன் இடம் போய்விடும் என்ற ரீதியில் லேசான மிரட்டலுடன் வைத்திருப்பது நல்லது. ஏனெனில், பொண்டிங், மைக் ஹஸி, ஷோன் மார்ஷ், ஜேம்ஸ் ஹோப்ஸ், கமரூன் வைட்போன்ற நடு வரிசை வீரர்களை ஹர்பஜன் சிங்கை வைத்துத் தான் வீழ்த்த வேண்டும். எனவே, இவர் சொதப்பினால் எந்த ஒரு இலக்கையும் அவுஸ்திரேலிய அணி எட்டி வெற்றி பெற்றுவிடும்.

தோனி நிறையத் தவறுகளைச் செய்கிறார். சமீபத்தில் நடந்த சலஞ்சர் உள்நாட்டுக் கிரிக்கெட் தொடரில் ஹர்பஜன் சிங்கை ஆடுவதற்கு 3ஆவதாகக் களமிறக்கினார். இது மிகவும் தவறு. அவர் தன்னை சகலதுறை வீரராக மயங்கத் தொடங்கியதுதான் அவரது பந்து வீச்சு சோபிக்காமல் போவதற்கு ஒரு காரணம். நீ ஒரு பந்து வீச்சாளர் உன் கடமை விக்கெட்டுகளை வீழ்த்துவது என்று யாராவது அவரிடம் அறிவுறுத்த வேண்டியுள்ளது.


இந்தத் தொடரில் இந்திய அணியின் பலவீனமே பந்து வீச்சுதான். அதேபோல் தோனி, ராகுல் டிராவிட், சுனில் கவாஸ்கர், அஞ்சுமன் கெய்க்வாட் போன்று ஆடுவதை விடுத்து ஆக்ரோஷமாக அடித்து விளையாடவேண்டும். ஏனெனில், அவுஸ்திரேலியாவின் பலவீனமே அந்த அணியின் சுழற்பந்து வீச்சுதான். நதன் ஹாரிட்சை அவுட்டாக்காவிட்டால் 240 ஓட்டங்களுக்குத் திணற வேண்டும் அது பொண்டிங்கிற்கே போதாது.

அவுஸ்திரேலிய அணியில் பலவீனங்கள் பல உள்ளன. மிட்செல் ஜான்சன் சீராக வீசுவதில்லை. பிரெட் லீ வேகமாக வீசுவதில் கவனம் செலுத்தி வருகிறார். இந்த நிலையில் பீற்றர் சிடில், டக் போலிஞ்சர், ஹில் பென்ஹாஸ் போன்ற வேகப்பந்து வீச்சாளர்களையே பொண்டிங் நம்பியுள்ளார்.

தொடக்கத்தில் ஷேன் வட்சன் அபாரமாக விளையாடி வருகிறார். இந்தியா இந்தத் தொடரில் வெற்றிபெற வேண்டுமென்றால் ஷேன் வற்சனை ஓட்டம் எடுக்க விடக்கூடாது. ஷோன் மார்ஷ் போன்ற வீரர்கள் இந்திய மண்ணில் ஆடி அனுபவம் பெற்றவர்கள். ஹஸியும் நல்ல நிலையில் உள்ளார். அனைத்திலும் மேலாக அந்த அணியின் களத்தடுப்பு ஒரு மிகப்பெரிய வேறுபாடு. களத்தடுப்பில் ஒரு 20 அல்லது 25 ஓட்டங்களை அவர்கள் இந்திய அணிக்குக் குறைத்து விடுவார்கள். மாறாக இந்திய அணி சமீபமாக மிகவும் மோசமாக களத்தடுப்பு செய்து வருகிறது.

தொடக்கம் முதலே ஆக்ரோஷமான கிரிக்கெட்டை ஆடினால் மட்டுமே தோனி இந்தத் தொடரைக் கைப்பற்ற முடியும். தொய்வாக ஆடினால் அவுஸ்திரேலியர்கள் இந்திய அணியின் மீது ஏறி சவாரி செய்து விடுவார்கள்.

எனவே 'எனக்கு வெற்றியும் தோல்வியும் ஒன்றுதான். ஒரு 25 ஓட்டங்கள் அதிகம் இருந்திருந்தால் வெற்றி பெற்றிருப்போம். தொடக்க வேகப்பந்து வீச்சாளர்கள் முதலில் 2 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தால் வெற்றி பெற்றிருப்போம். களத்தடுப்பு சரியில்லை. அதனால் தோல்வி துடுப்பாட்ட வீரர்ககள் பொறுப்பை உணர்ந்து ஆடவேண்டும். நாணயச் சுழற்சி எல்லாவற்றையும் தீர்மானித்து விட்டது. விளக்கொளியில் இலக்கைத் துரத்துவது கடினம்' என்பன போன்ற வழக்கமான தடை வாசகங்களை தோனி தன் மனதிலிருந்து நீக்கினால் இந்திய அணி அவுஸ்திரேலியாவை வீழ்த்த முடியும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்ப்பப்பை மாற்று சத்திர சிகிச்சைக்கு தயாராகியுள்ள பிரிட்டிஷ் மருத்துவர்

**லண்டன்:** கர்ப்பப்பை மாற்று சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொள்ளும் கட்டத்தைப் பிரிட்டிஷ் மருத்துவர்கள் நெருங்கியுள்ளதாக அந்நாட்டு செய்தியொன்று தெரிவிக்கின்றது. ஒரு குழந்தைக்காக ஏங்கும் உலகெங்கிலும் வாழும் பல்லாயிரக் கணக்கான பெண்களுக்கு இச் செய்தி புதியதொரு நம்பிக்கையைக் கொடுத்துள்ளது.

கர்ப்பப்பை குறைபாடு போன்ற மருத்துவ காரணங்களினால் குழந்தையின்றித் தவிக்கும் பெண்களுக்கு வேறொருவரின் கருப்பையைப் பொருத்துவதன் மூலம் குழந்தையைப் பெற்றெடுக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் மருத்துவப் புரட்சி இன்னும் இரு வருடங்களில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுமென ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கருப்பை மாற்று அறுவைச் சிகிச்சையை மேற்கொண்ட பின்னர் வழமையான குருதிச் சுற்றோட்டத்தில் ஏற்படக் கூடிய பிரச்சினைகளுக்குத் தற்போது தீர்வு காணப்பட்டுள்ளதாக மகப்பேற்று மருத்துவ நிபுணரொருவர் தெரிவித்துள்ளார்.

முயல், பன்றி, செம்மறிஆடு மற்றும் குரங்கு போன்ற விலங்குகளில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள் வெற்றியளித்துள்ள போதும் ஆராய்ச்சிகளுக்கான நிதிப்பற்றாக்குறை மற்றும் மருத்துவ உலகின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தல் போன்ற காரணங்களால் மனித கருப்பை மாற்று அறுவைச் சிகிச்சைக்கான பரிசோதனை முயற்சிகள் தாமதமடைவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உலகில் முதன்முறையாக 2000 ஆம் ஆண்டில் சவூதி அரேபியாவைச் சேர்ந்த 26 வயது பெண்ணொருவருக்கு வேறொரு கருப்பை பொருத்தப்பட்டபோதும் குருதி விநியோகத்தில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக இக் கருப்பை 99 நாட்களின் பின்னர் அகற்றப்பட்டது.

எனினும், மாற்றுக் கருப்பை பொருத்தப்பட்ட பெண்களை செயற்கையான கருத்தரிப்பு முறைகளின் மூலமே கருவுறச் செய்து சத்திர சிகிச்சை மூலம் மட்டும் குழந்தையை பிரசவிக்க முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இக் கருப்பை தற்காலிகமாகவே பொருத்தப்படுமெனவும் மாற்றுக் கருப்பை பொருத்தப்பட்ட இரண்டு அல்லது மூன்று வருடங்களில் குறிப்பிட்ட பெண்கள் குழந்தையையோ அல்லது குழந்தைகளையோ பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் கருப்பை மாற்று அறுவைச் சிகிச்சை பரிசோதனைகளை மனிதரில் மேற்கொள்வதற்கான அனுமதியைப் பெற்றிருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.



147 தடவைகள் இடுப்பில் வளையத்தை சுற்றிவளைத்து பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்திய அமெரிக்க முதற்பெண்மணி மிச்செல் ஒபாமா.

# கத்தோலிக்க மதத்தை தழுவுவதற்கு அங்கிலிக்கன் உறுப்பினர்களுக்கு அனுமதி

**வத்திக்கான்:** தமது மதத்தில் விருப்பமற்ற அங்கிலிக்கன் திருச்சபை உறுப்பினர்கள் ரோமன் கத்தோலிக்க மதத்தை தழுவுவதற்கான நடைமுறைகளை இலகுவாக்க பரிசுத்த பாப்பரசர் பதினாறாம் பெனடிக்ற் இணங்கியுள்ளார்.

உலகளாவிய ரீதியில் சுமார் 77 மில்லியன் மக்களைக் கொண்ட அங்கிலிக்கன் சமூகத்தின் சில பிரிவினர் கன்னியாஸ்திரிகளின் தலைமையிலான ஆராதனைகள் மற்றும் பேராயர்களின் ஓரினச் சேர்க்கை விவகாரம் போன்றவற்றால் தமது மதத்தில் அதிருப்தியடைந்துள்ளனர்.

பல வருடங்களாக நீடிக்கும் இவ் அதிருப்தி சூழ்நிலையை முடிவுக்கு கொண்டுவரும் முகமாகவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனினும் இந் நடவடிக்கையால் இரு திருச்சபைகளுக்குமிடையிலான தொடர்புகள் பாதிப்படையாதென இரு தரப்பும் தெரிவித்துள்ள அதேவேளை, தேவாலயங்களை விட்டு வெளியேறும் அங்கிலிக்கன் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதனாலேயே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

தமது சொந்தப் பாரம்பரியங்களை தொடரும் அதேவேளை, தனியாகவோ அல்லது குழுவாகவோ கத்தோலிக்க மதத்தில் இணைய விரும்பும் அங்கிலிக்கன் உறுப்பினர்களை ஏற்றுக்கொள்வதற்கான அபொஸ்தலிக்க அரசியலமைப்பு என்னும் ஆவணத்தை பாப்பரசர் அங்கீகரித்துள்ளதாக வத்திக்கான் தெரிவித்துள்ளது.

1534 ஆம் ஆண்டு கத்தோலிக்க திருச்சபையிலிருந்து விலகிய மன்னர் எட்டாம் ஹென்றி இங்கிலாந்தில் புதிய திருச்சபையை நிறுவி அதன் தலைவராகத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார். இதுவே அங்கிலிக்கன் திருச்சபையென அழைக்கப்பட்டது.

கத்தோலிக்க மதத்தை தழுவுபவர்கள் பாப்பரசரை தமது தலைவராக அங்கீகரிக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளதுடன் அபொஸ்தலிக்க ஆவணம் இரு சபைகளுக்குமிடையில் சமநிலையொன்றை பேண விரும்புவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



ஹங்கேரியின் தலைநகர் புடபெஸ்ற்றில் நடைபெற்ற நடன நிகழ்வொன்றில் கலந்து கொண்ட கலைஞர்கள் தோற்றம் காட்சி.

## சர்வதேச வலம்

ச.துஷ்யந்தினி

# சிறிய கப்பலில் உலகைச் சுற்ற ஆரம்பித்திருக்கும் 16 வயதுச் சிறுமி




**கன்பரா:** அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த பதினாறு வயதுச் சிறுமி ஜெஸிகா வாட்சன் சிறிய கப்பலில் உலகைச் சுற்றுவதற்கான தனது பயணத்தை இவ்வார முற்பகுதியில் ஆரம்பித்துள்ளார்.

சிட்னி துறைமுகத்திலிருந்து புறப்பட்ட ஜெஸிகாவுக்கு அந்நாட்டுத் தலைவர்கள் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ள அதேவேளை, ஜெஸிகாவின் உறவினர்களும் நண்பர்களும் நேரில் வந்து வாழ்த்துகளைக் கூறி அவரை வழியனுப்பி வைத்தனர்.

கடல் வழியாக 8 மாதத்தில் உலகைச் சுற்றப் புறப்பட்டுள்ள ஜெஸிகாவின் கப்பலைத் தொடர்ந்து அவருக்குப் பாதுகாப்பாக சிறிய படகுகளில் சிலர் செல்கின்றனர்.

பதினொரு வயது முதலே உலகைச் சுற்ற வேண்டுமென்ற இலட்சியத்தைக் கொண்ட ஜெஸிகா வெற்றிகரமாகத் தனது பயணத்தை முடித்துவிட்டால் உலகை கடல்வழியாகச் சுற்றி வந்த முதல் சிறுமி என்ற பெருமை அவருக்கு கிடைப்பதுடன், அவரது இலட்சியமும் நிறைவேறிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









# மரக்கறித் திருவிழாவில் சிந்திய இரத்தம்









சீனாவில் 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஈயச்சுரங்கங்களில் பணி புரிந்த தொழிலாளர்கள் தங்களுக்கு ஏற்பட்ட நோய்களைக் குணமாக்குவதற்காக தாவர உணவு வகைகளை மாத்திரம் உண்ண ஆரம்பித்தனர். அதன் விளைவாக முற்றாக நோய்களில் இருந்து விடுபட்ட அவர்கள் அதற்குப் பிறகு தாவர உணவுவகைத் திருவிழா (Vegiterian Festival)வை வருடாந்தம் கொண்டாடுவதை ஒரு நேர்த்தி போன்று வழக்கமாக்கிக் கொண்டனர்.

இந்த வழக்கம் நாளடைவில் தாய்லாந்திற்கும் பரவியது. நேற்றைய தினம் தாய்லாந்தின் புகெட் தீவில் இடம்பெற்ற தாவர உணவுத் திருவிழாவில் ஊர்வலமாகச் செல்வதற்கு முன்னதாக சீன ஆலயமான பாங் நியோவில் பக்தர்கள் தங்கள் நேர்த்திகளை நிறைவேற்றிக் கொள்வதைக் காண்கிறீர்கள்.

இப்பத்திரிகை நொதேர்ண் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் யாழ்ப்பாணம், கே.கே.எஸ். வீதி 336ஆம் இலக்கத்தில் 2009 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org